Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 46

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

26 ஸஃபர் 1439 ஹிஜ்ரி கமரி 16 நுபுவ்வத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

16 நவம்பர் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**பராஹீனே அஹ்மதிய்யாவில் رَبِّ لَا تَذَرْنِي فَرْدًا وَأَنْتَ خَيْرُ الْوَارِثِينَ என் இறைவா! என்னைத் தனித்தவனாக விட்டு விடாதிருப்பாயாக. வாரிசாக இருப்பவர்களுள் நீ மிகச் சிறந்தவனாவாய் என்ற ஒரு முன்னறிவிப்பு இருந்தது. அல்லாஹ் ஆன்மீகத் தொடர்புள்ளவர்களின் ஒரு ஜமாஅத்தை என்னுடன் இணைத்து விடுவான். அவர்கள் எனது கைகளில் தவ்பா செய்வார்கள் என்ற எதிர்காலத்தில் நடக்கவிருந்த விஷயம் தொடர்பாக இந்த துஆ ஒரு முன்னறிவிப்பாக இருந்தது. எனவே, இறைவனுக்கு நன்றி. இந்த முன்னறிவிப்பு மிகவும் தெளிவாக நிறைவேறி விட்டது. இறைவன் மீது ஆணையிட்டு என்னால் கூற முடியும். அதாவது, எனது ஆயிரக்கணக்கான உண்மையாளர்களான நன்றியுணர்வுள்ள சீடர்கள் பைஅத் செய்த பிறகு, எத்தகைய தூய மாற்றத்தைப் பெற்றுள்ளனர் என்றால், அவர்களின் ஒவ்வொரு நபரும் ஓர் அடையாளமாகத் திகழ்கின்றனர். முதலில் நான் தனியாக இருந்தேன். என்னுடன் எந்தவொரு ஜமாஅத்தும் இருக்கவில்லை. இப்போது ஆயிரக்கணக்கான மக்கள் என்னுடன் இருக்கின்றனர் என்ற இந்த விஷயத்தை எந்த எதிரியாலும் மறைக்க முடியாது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**91 -வது அடையாளம்:** இன்றிலிருந்து 25 வருடங்களுக்கு முன்னதாக பராஹீனே அஹ்மதிய்யா எல்லா நாடுகளிலும் வெளியிடப்பட்டு விட்டது. அதாவது, பஞ்சாபின் ஒவ்வொரு பகுதியிலும், இந்தியாவிலும், அரபு நாடுகளிலும், சிரியாவிலும், ஆஃப்கானிஸ்தானிலும், புஹாராவிலும் (ரஷ்யாவிலும்), எல்லா இஸ்லாமிய நாடுகளிலும் இந்நூல் சென்று சேர்ந்தது. அதில், இந்த ஒரு முன்னறிவிப்பு இருக்கின்றது. رَبِّ لَا تَذَرْنِي فَرْدًا وَأَنْتَ خَيْرُ الْوَارِثِينَ அதாவது, இறைவனின் வஹியில் என் தரப்பிலிருந்து, 'என் இறைவா ! நான் இப்போது தனியாக இருப்பது போன்று என்னை தனித்தவனாக விட்டு விடாதிருப்பாயாக. உன்னை விட சிறந்த வாரிசாக யார் இருக்க முடியும் ?' என்ற இந்த துஆ செய்யப்பட்டிருந்தது. எனக்கு இப்போது சந்ததிகளும் தந்தையாரும் சகோதரரும் உள்ளனர் என்றாலும், ஆன்மீகமான முறையில் இப்போது நான் தனியாகத்தான் இருக்கின்றேன். உன்னிடமிருந்து ஆன்மீகமான முறையில் எனது வாரிசுகளாக இருக்கின்ற அத்தகைய மக்களை நான் விரும்புகின்றேன். அல்லாஹ் ஆன்மீகத் தொடர்புள்ளவர்களின் ஒரு ஜமாஅத்தை என்னுடன் இணைத்து விடுவான். அவர்கள் எனது கைகளில் தவ்பா செய்வார்கள் என்ற எதிர்காலத்தில் நடக்கவிருந்த விஷயம் தொடர்பாக இந்த துஆ ஒரு முன்னறிவிப்பாக தெளிவாக நிறைவேறி விட்டது. பஞ்சாபிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் ஆயிரக்கணக்கான நல்ல இயல்புள்ள மக்கள் எனது கைகளில் பைஅத் செய்துள்ளனர். அவ்வாறே காபூல் (ஆஃப்கானிஸ்தான்) பிரதேசத்தின் மண்ணிலிருந்து பல மக்களும் என்னிடம் பைஅத் செய்து இந்த இயக்கத்தில் இணைந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மனிதர்கள் எனது கைகளில் தங்களது பல வகையான பாவங்களிலிருந்து தவ்பா செய்திருப்பது மட்டுமே எனக்கு போதுமானதாக இருக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்களிடம் அவர்கள் பைஅத் செய்த பிறகு எத்தகைய மாற்றத்தை நான் காண்கின்றேன் என்றால் எதுவரை இறைவனது கை ஒருவரை தூய்மைப்படுத்தாதோ அதுவரை ஒருபோதும் அந்த அளவு அவர் தூய்மையடைய முடியாது. இறைவன் மீது ஆணையிட்டு என்னால் கூற முடியும். அதாவது, உண்மையாளர்களான நன்றியுணர்வுமிக்க எனது ஆயிரக்கணக்கான சீடர்கள் பைஅத் செய்த பிறகு எத்தகைய தூய மாற்றத்தை பெற்றுள்ளனர் என்றால், அவர்களில் ஒவ்வொருவரும் ஓர் அடையாளமாகத் திகழ்கின்றனர். அவர்களது இயல்பில் முன்னரே நேர்வழி மற்றும் நற்பாக்கியத்தின் ஒரு தன்மை மறைவாக இருந்தது என்பது சரிதான் என்றாலும், அவர்கள் பைஅத் செய்யாத வரை அது பகிரங்கமாக வெளிப்படவில்லை. சுருக்கமாக, இறைவனின் சாட்சியத்திலிருந்து இவ்விஷயம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, முதலில் நான் தனியாக இருந்தேன். என்னுடன் எந்த ஜமாஅத்தும் இருக்கவில்லை. இப்போது ஆயிரக்கணக்கான மக்கள் என்னுடன் இருக்கின்றனர் என்ற இந்த விஷயத்தை எந்த எதிரியாலும் மறைக்க முடியாது. எனவே, இறைவனின் முன்னறிவிப்புகள் எப்படிப்பட்டவையாக இருக்கின்றன என்றால் அவற்றுடன் இறைவனின் உதவியும் ஆதரவும் இருக்கின்றது. யார் இந்த விஷயத்தில் என்னைப் பொய்ப்படுத்த முடியும் ? அதாவது, எப்போது இறைவன் இந்த முன்னறிவிப்பைக் கூறியிருந்தானோ மேலும் பராஹீனே அஹ்மதிய்யாவில் அது எழுதப்பட்டு வெளியிடப்பட்டதோ அந்த சமயத்தில் இறைவன் கூறியிருந்தது போன்று நான் தனித்தவனாக இருந்தேன். இறைவனை தவிர என்னுடன் வேறு யாரும் இருக்கவில்லை. நான் எனது உறவினர்களின் பார்வையிலும் அற்பமானவனாக இருந்தேன். ஏனென்றால், அவர்களின் வழிகள் வேறானதாகவும் எனது வழிகள் வேறானதாகவும் இருந்தது. காதியானில் உள்ள எல்லா இந்துக்களும் என்னை எதிர்த்த பிறகும்கூட அந்த காலத்தில் எவராலும் அறியப்படாத நிலையில் நான் வாழ்ந்து வந்தேன் என்பதற்கு சாட்சி கூறும் கட்டாயத்திற்கு அவர்கள் ஆளாகி விடுவர். இந்த அளவு பற்றுடனும் அன்புடனும் உயிரை அர்ப்பணித்தவாறும் தொடர்பு வைத்திருப்பவர்கள் என்னுடன் இணைந்து விடுவர் என்பதற்கு எந்தவோர் அடையாளமும் இல்லாமல் இருந்தது. இப்போது கூறுங்கள். இந்த முன்னறிவிப்பு ஓர் அற்புதம் அல்லவா ? இதை செய்வதற்கு மனிதனுக்கு வல்லமை இருக்கின்றதா ? அவ்வாறு அவனுக்கு வல்லமை இருக்கின்றது என்றால், பிறகு இக்காலத்திலும் கடந்த காலத்திலும் இதற்கு இணையான ஒன்றை நீங்கள் எடுத்து காட்டுங்கள்.

فَإِنْ لَمْ تَفْعَلُوا وَلَنْ تَفْعَلُوا فَاتَّقُوا النَّارَ الَّتِي وَقُودُهَا النَّاسُ وَالْحِجَارَةُ أُعِدَّتْ لِلْكَافِرِينَ நீங்கள் (அவ்வாறு) செய்யவில்லையாயின் உங்களால் ஒருபோதும் அவ்வாறு செய்யவே இயலாது. மனிதர்களும் கற்களும் எரிபொருளாயிருக்கும் நெருப்பிலிருந்து

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

பாகிஸ்தானில் அவ்வப்போது ஏதாவது ஒரு வகையில் அஹ்மதிகளுக்கு எதிராக அரசியல்வாதிகளும், ஆலிம்களும் கூச்சலிடுகின்றனர். அவர்களது எண்ணங்களின் அடிப்படையில் சமுதாயத்தை தங்கள் பின்னால் கொண்டு வருவதற்கு இது மிகவும் எளிய வழிமுறையாகும். மக்களை தம்மைப் போன்ற கருத்துடையவர்களாக ஆக்குவதற்கும், பிரபலமடைவதற்கும், முஸ்லிம்களைத் தூண்டி விடுவதற்கும் அவர்களிடம் உள்ள மிகப்பெரிய ஆயுதம் கத்மே நுபுவ்வத் என்ற ஆயுதமாகும். ஏதாவது அரசியல் கட்சியின் நிலை சரியில்லாமல் போனால் அல்லது அரசியல்வாதியின் மீது இருந்த நம்பிக்கை குறைய ஆரம்பித்தால் அல்லது ஏதாவது பெயர் தாங்கி மார்க்க அமைப்புகள் அரசியல் ஆதாயம் அடைய விரும்பினால் அல்லது வேறு அரசியல் கட்சி அல்லது அரசியல்வாதியை குறைத்துக் காட்ட விரும்பினால் அஹ்மதிகளுடன் அவர்களைத் தொடர்புபடுத்தி, பாருங்கள்! வெளிநாட்டு சக்திகளின் தாக்கத்தால் இவர்கள் அஹ்மதிகளை முஸ்லிம்களுடன் இணைக்க விரும்புகின்றனர் அல்லது இணைக்கின்றனர். ஆனால், அஹ்மதிகள் இவர்களின் எண்ணங்களின் அடிப்படையில் கத்மே நுபுவ்வத்தை மறுப்பவர்கள் என்று கூறுகின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னதாக பாகிஸ்தானின் National Assembly –ல் ஒரு சட்டம் திருத்தப்பட்டபோது அரசியல் கட்சி ஒன்றோ அல்லது ஆட்சியில் இருக்கின்ற கட்சியோ தனது சுய பயன்களுக்காக அந்த சொற்களில் சில மாற்றங்களைச் செய்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பொருத்தவரையில் நாங்கள், எந்த ஒரு வெளிநாட்டு சக்தியிடமும் எங்களுக்காக பாகிஸ்தானின் அரசியல் சட்டத்தில் திருத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்றோ, அரசியல் சாசனம் மற்றும் அதன் சட்டத்தின் அடிப்படையில் எங்களை முஸ்லிம்களாக்குங்கள் என்றோ எந்த சமயத்திலும் கூறியதில்லை.

அவ்வாறே நாங்கள் எந்தவொரு பாகிஸ்தான் அரசாங்கத்திடமும் இதை செய்து தரும்படி கையேந்தி நிற்கவில்லை. மேலும் நாங்கள் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுவதற்கு எங்களுக்கு எந்தவொரு Assembly –யின் அல்லது அரசாங்கத்தின் எந்தவொரு சான்றிதழும் தேவையில்லை. நாங்கள் எங்களை முஸ்லிம்கள் என்ற கூறுகின்றோம். ஏனென்றால் நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். எங்களை அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் முஸ்லிம் என்று கூறியுள்ளனர். நாங்கள் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா கூறுகின்றோம். மேலும் நாங்கள் இஸ்லாத்தின் எல்லா அடிப்படை அம்சங்கள் மற்றும் ஈமானின் அம்சங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். நாங்கள் திருக்குர்ஆன் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என்று நம்புகிறோம். எவ்வாறு அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளானோ அந்த வசனத்தை தொடக்கத்தில் ஓதினேன். அவ்வாறே முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் ஆக இருக்கின்றார்கள் என்பதை நாங்கள் முழு உறுதியுடன் நம்புகிறோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தெளிவாகவும் பல இடங்களில் இதை வெளிப்படுத்தியும் எழுதியுள்ளார்கள். அதாவது எவர் கத்மே நுபுவ்வத்தை மறுப்பாரோ அவர் மார்க்கமற்றவரும் இஸ்லாத்திலிருந்து வெளியில் சென்றவர் என்றும் எண்ணுகிறேன். அவர் அஹ்மதியும் அல்ல; முஸ்லிமும் அல்ல என்று அவர்கள் கூறுகின்றனர். எனவே, எங்களுக்கு எதிராக கூச்சல் எழுப்புவதும் எங்கள் மீது குற்றம் சுமத்துவதும் அதாவது நாங்கள் கத்மே நுபுவ்வத்திற்கு எதிரானவர்கள் (நவூதுபில்லாஹ்) என்றும், பெருமானார் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என்று நாங்கள் ஏற்கவில்லை என்பதும் மிகவும் கீழ்த்தரமான அறுவருப்பான குற்றச்சாட்டு ஆகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காத்தமுன் நபிய்யீன் என்ற அந்தஸ்து பற்றி மிகவும் இறைஞானம் நிறைந்த விளக்கங்களையும் கத்முன் நுபுவ்வத்தின் உண்மை நிலையையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது எழுத்துக்கள் சிலவற்றிலிருந்தும் அன்னாரது கூற்றுக்களிலிருந்தும் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இல்ஹாம்களை திருக்குர்ஆனை விட மேலானவையாகக் கருதினால் நாங்கள் இன்று பொருள் தியாகங்கள் செய்து உலகம் முழுவதும் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பை வெளியிட்டு வருகிறோமே இதற்குப் பதிலாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இல்ஹாம்களை வெளியிட்டிருப்போம். தற்போது 75 மொழிகளில் திருக்குர்ஆன் முழுமையாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. சில மொழிகளில் மொழிபெயர்ப்பு நடைபெறுகிறது. 111 மொழிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்குர்ஆன் வசனங்களின் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டுள்ளன. பெரிய பெரிய இஸ்லாமிய அரசுகளே! பண வசதி படைத்த அமைப்புகளே! நீங்கள் எத்தனை மொழிகளில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பை வெளியிட்டுள்ளீர்கள் என்று கூறுங்கள் பார்க்கலாம்.

காத்தமுன் நபிய்யீன் என்பதன் உண்மையான பொருளையும் அதன் ஆன்மாவையும் அஹ்மதிகளாகிய நாங்கள்தான் புரிந்துள்ளோம். மேலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனாக இருக்கின்றார்கள் என்ற அறிவிப்பை உலகின் பல்வேறு நாடுகளில் அந்த நாட்டின் அஹ்மதிகள்தான் வெளியிட்டு வருகிறார்கள். பிறகும் கூட இந்த மக்கள் அஹ்மதிகள் கத்மே நுபுவ்வத்தை மறுக்கக் கூடியவர்கள் என்று எங்கள் மீது குற்றம் சாட்டுகின்றனர் – நவூதுபில்லாஹ்.

பாகிஸ்தானின் Assembly –யில் சட்டத்தை உருவாக்குவதற்கான சொற்கள் தொடர்பாக பரஸ்பரம் அவர்களுக்கிடையில் இருந்த விவகாரங்களில் அவர்களே ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டனர். இவ்வாறு இதற்கு ஒரு தீர்வு கண்ட பிறகு சில நாட்களுக்கு முன் Assembly –யின் ஓர் உறுப்பினர் எவ்வித காரணமுமின்றி மக்களைத் தூண்டி விடும் வகையில் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தியுள்ளார். இந்த சொற்பொழிவு Assembly –யில் உள்ள உறுப்பினர்களுக்கு பொய்யான தன்மான உணர்வை ஏற்படுத்துவதற்காக மட்டும் நிகழ்த்தப்படவில்லை. மாறாக, அத்துடன் பொதுமக்களைத் தூண்டி விட்டு நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகவும் அது இருக்கின்றது. அதன் மூலமாக அஹ்மதிகளுக்கு எதிராக எல்லாரும் எழுந்து நிற்க வேண்டும் என்பதையே அவர் விரும்புகின்றார். மேலும் தான் நாட்டின் மீது பற்று கொண்ட ஒரு தலைவர் என்பதையும் நிரூபிக்கின்ற ஒரு முயற்சியாகவும் இது இருக்கின்றது. அதன் மூலம் அவரது அரசியல் வாழ்விற்கு ஒருவேளை புது வாழ்வு கிடைக்கலாம் என்று அவர் கருதுகின்றார்.

தன் தரப்பிலிருந்து மிகுந்த நம்பிக்கையுடன் மார்தட்டியவாறு Assembly –யின் இந்த உறுப்பினர் காயிதே அஃஸம் பல்கலைக்கழகத்தில் உள்ள Physics Department –ற்கு டாக்டர் அப்துஸ் ஸலாம் அவர்களின் பெயரை சூட்டியிருப்பதை எங்களது தன்மான உணர்வு சகித்துக் கொள்ளாது. ஏனென்றால், அவர் காஃபிர் ஆவார். அவருக்கு கத்முன் நுபுவ்வத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று கூறியுள்ளார். அவர் இந்த விஷயத்தை சிந்தித்திருக்க வேண்டும். யார் இந்தப் பெயரை சூட்டினாரோ அவர் அவரது கட்சியைச் சார்ந்தவர். அவர் நாட்டின் பிரதமராகவும் இருந்தார். அதிபராகவும் இருந்தார். இன்னும் சொல்வதென்றால், Assembly –யின் இந்த உறுப்பினரின் மாமனராகவும் அவர் இருக்கின்றார். எனவே, பெயர் சூட்டப்பட்ட அந்த சமயத்தில் இவர் ஏன் தனது தன்மான உணர்வை வெளிப்படுத்திக் காட்டவில்லை? பாகிஸ்தான் Assembly இந்த பெயரை மாற்ற விரும்பினால் மிகவும் மகிழ்ச்சியுடன் அதை மாற்றட்டும். டாக்டர் அப்துஸ் ஸலாம் அவர்களின் குடும்பத்தினருக்கோ அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கோ இதனால் எந்த வித்தியாசமும் ஏற்படப் போவதில்லை.

பிறகு அஹ்மதிகளை இராணுவத்தில் சேர்க்க கூடாது என்று இவர்கள் கூறுகின்றனர். இதுவரை இராணுவத்தில் சேர்ந்துள்ள அஹ்மதிகள் நாட்டிற்காக எல்லா விதமான தியாகங்களையும் செய்துள்ளனர் என்பதையே இன்று வரையுள்ள பாகிஸ்தானின் வரலாறு நமக்குக் கூறிக்கொண்டிருக்கின்றது. பொதுவாக இராணுவ சிப்பாய் அல்லது Junior Comissoned Officer அல்லது அதிகபட்சம் கர்னல் மேஜர் வரையில் பதவியில் இருப்பவர்கள்தான் பொதுவாக தியாகங்கள் செய்கின்றனர். ஆனால், அஹ்மதிகள் எப்படிப்பட்டவர்கள் என்றால் தளபதியின் தகுதி வரை சென்றடைந்தும் கூட சாதாரண படை வீரர்களுடன் இணைந்து போர் செய்து நாட்டிற்காக அவர்கள் ஷஹீது ஆகி இருக்கின்றனர். எனவே, அஹ்மதி ஜெனரல்கள் ஷஹீது ஆகி இருக்கின்றனர்.

இவ்வாறு அஹ்மதிகள் மீது இவர்கள் நாட்டிற்கு தொண்டாற்ற மாட்டார்கள். இவர்கள் நாட்டிற்கு நன்றியுடையவர்கள் இல்லை என ஆட்சேபனை செய்யப்படுகிறது. ஆனால், இன்று பாகிஸ்தானில் அஹ்மதிகள் மட்டும்தான் حُبُّ الْوَطَنِ مِنَ الْإِيْمَانِ – நாட்டுப்பற்று ஈமானின் அங்கமாகும் என்பதன் மீது நம்பிக்கை வைத்துள்ளனர், அதன்படி செயல்படுகின்றார்கள். அவர்கள் தமது உயிர் பொருள் ஆகியவற்றை தியாகம் செய்யக்கூடியவர்கள் என்று என்னால் உறுதியாகக் கூற முடியும். அவர்கள் அவற்றை தியாகம் செய்து வருகின்றனர். நாங்கள் அரசியல் வியாபாரத்தை மேம்படுத்த வெறும் சொற்பொழிவாற்றக் கூடியவர்கள் அல்ல. எங்களுக்கு அரசியலுடன் எந்தத் தொடர்பும் கிடையாது. நாங்கள் மார்க்கத்திற்காக உயிரை அர்ப்பணிக்கக்கூடியவர்கள் ஆவோம். ஆனால் மார்க்கத்தின் பெயரில் அரசியல் செய்யக் கூடியவர்களோ, மார்க்கத்தின் பெயரில் கொலை செய்யக் கூடியவர்களோ அல்ல. நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என ஏற்றுக் கொண்டுள்ளோம். உள்ளத்தளவிலும் நம்பிக்கை கொள்கிறோம். அன்னாரது கண்ணியத்திற்காக எல்லாவித தியாகங்களைச் செய்கின்றோம்; செய்வதற்கு ஆயத்தமாக உள்ளோம்; செய்து கொண்டேயிருப்போம் – இன்ஷா அல்லாஹ்.

பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளின் கடமை என்னவென்றால், அவர்கள் ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை எந்த நாட்டிற்காக அஹ்மதிகள் தியாகங்களைச் செய்து வந்தார்களோ அந்த நாட்டை அல்லாஹ் சாந்தி, சமாதானத்துடன் வைப்பதற்காக அநீதி இழைக்கின்ற தலைவர்கள் மற்றும் சுயநலன் கொண்ட ஆலிம்களிடமிருந்து அதனை பாதுகாப்பானாக. உலகிலுள்ள சுதந்திரமான மற்றும் கண்ணியமிகு நாடுகளில் பாகிஸ்தானும் ஒரு நாடாக எண்ணப்படுவதற்காக துஆ செய்து வாருங்கள்.

## சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
## (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
## **13 அக்டோபர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **அஹா** மாதம் **13 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

**مَا كَانَ مُحَمَّدٌ أَبَآ أَحَدٍ مِّنْ رِّجَالِكُمْ وَلٰكِنْ رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ**
**وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَيْءٍ عَلِيْمًا**

இந்த வசனத்தின் பொருள்: முஹம்மது உங்களைப் போன்ற எந்த ஆணுக்கும் தந்தை இல்லை. ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களுக்கு முத்திரையாகவும் இருக்கின்றார்கள். அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கு அறிபவனாவான். **(33:41)**

பாகிஸ்தானில் அவ்வப்போது ஏதாவது ஒரு வகையில் அஹ்மதிகளுக்கு எதிராக அரசியல்வாதி –களும், ஆலிம்களும் கூச்சலிடுகின்றனர். அவர்களது எண்ணங்களின் அடிப்படையில் சமுதாயத்தை தங்கள் பின்னால் கொண்டு வருவதற்கு இது மிகவும் எளிய வழிமுறையாகும். மக்களை தம்மைப் போன்ற கருத்துடையவர் –களாக ஆக்குவதற்கும், பிரபலமடைவதற்கும், முஸ்லிம்களைத் தூண்டி விடுவதற்கும் அவர்களிடம் உள்ள மிகப்பெரிய ஆயுதம் கத்மே நுபுவ்வத் என்ற ஆயுதமாகும். ஏதாவது அரசியல் கட்சியின் நிலை சரியில்லாமல் போனால் அல்லது அரசியல்வாதியின் மீது இருந்த நம்பிக்கை குறைய ஆரம்பித்தால் அல்லது ஏதாவது பெயர் தாங்கி மார்க்க அமைப்புகள் அரசியல் ஆதாயம் அடைய விரும்பினால் அல்லது வேறு அரசியல் கட்சி அல்லது அரசியல்வாதியை குறைத்துக் காட்ட விரும்பினால் அஹ்மதிகளுடன் அவர்களைத் தொடர்புபடுத்தி, பாருங்கள்! வெளிநாட்டு சக்திகளின் தாக்கத்தால் இவர்கள் அஹ்மதிகளை முஸ்லிம்களுடன் இணைக்க விரும்புகின்றனர் அல்லது இணைக்கின்றனர். ஆனால், அஹ்மதிகள் இவர்களின் எண்ணங்களின் அடிப்படையில் கத்மே நுபுவ்வத்தை மறுப்பவர்கள் என்று கூறுகின்றனர். எனவே, இந்த பெயர் தாங்கி இஸ்லாத்திற்காக வேதனையுடையவர்கள் நாங்கள் இறுதி நபித்துவத்திற்கு எந்தப் பாதிப்பையும் ஏற்பட விடமாட்டோம்; கொடுமை இழைக்க விடமாட்டோம் என்கின்றனர். மேலும், அஹ்மதிகள் முஸ்லிம்கள் என்று கூறுவது பெரிய கொடுமையான கூற்று என்று கூறுகின்றனர். எங்கள் கொள்கைக்காக உயிரைக் கூட தியாகம் செய்வோம் என்கின்றனர்.

இதற்கு ஆட்சியில் இருக்கின்ற மற்ற கட்சியின் சார்பாக அதன் உறுப்பினர்கள் Assembly –யில் எழுந்து நின்று இவ்வாறு கூறுகின்றனர். அஹ்மதிகளுக்கு ஏதாவது உரிமை வழங்குவது குறித்த பேச்சுக்கே இடமில்லை. மாறாக, ஒரு பாகிஸ்தான் குடிமகன் என்ற அடிப்படையில் சிறிய உரிமை கிடைத்தாலும் கூட கூச்சலிட்டு இதையும் பறித்து விட வேண்டும் என்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தங்களுடைய அரசியல் அஜெண்டாக்கள் உள்ளன. அவ்வாறே ஒவ்வொருவருக்கும் தங்களுடைய சொந்த பயன்கள் உள்ளன. ஆனால் இதில் தொடர்பில்லாத சூழ்நிலையிலும் வலுக்கட்டாயமாக அஹ்மதிகளை இதனுள் இழுக்கின்றனர். இது அவர்களுக்கு எளிமையானதாக இருப்பதால் இதை செய்வதற்கு Assembly –யின் உறுப்பினர் –களும், உறுப்பினர் அல்லாதவர்களும் போட்டி போடுகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்னதாக பாகிஸ்தானின் National Assembly –ல் ஒரு சட்டம் திருத்தப்பட்டபோது அரசியல் கட்சி ஒன்றோ அல்லது ஆட்சியில் இருக்கின்ற கட்சியோ தனது சுய பயன்களுக்காக அந்த சொற்களில் சில மாற்றங்களைச் செய்தது. இது தொடர்பாக நாம் பார்த்து வருவது என்னவென்றால் இதன் காரணமாக பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக பெரும் கூச்சல் எழுந்தது. ஊடகங்கள் மூலமாக இவையெல்லாம் உலகின் முன்னால் வந்து விட்டது. எனவே, இதைப் பற்றி அதிகமாக எதையும் கூற வேண்டிய தேவையில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பொருத்தவரையில் நாங்கள், எந்த ஒரு வெளிநாட்டு சக்தியிடமும் எங்களுக்காக பாகிஸ்தானின் அரசியல் சட்டத்தில் திருத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்றோ, அரசியல் சாசனம் மற்றும் அதன் சட்டத்தின் அடிப்படையில் எங்களை முஸ்லிம்களாக்குங்கள் என்றோ எந்த சமயத்திலும் கூறியதில்லை. அவ்வாறே நாங்கள் எந்தவொரு பாகிஸ்தான் அரசாங்கத்திடமும் இதை செய்து தரும்படி கையேந்தி நிற்கவில்லை. மேலும் நாங்கள் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுவதற்கு எங்களுக்கு எந்தவொரு Assembly –யின் அல்லது அரசாங்கத்தின் எந்தவொரு சான்றிதழும் தேவையில்லை.

நாங்கள் எங்களை முஸ்லிம்கள் என்ற கூறுகின்றோம். ஏனென்றால் நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். எங்களை அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் முஸ்லிம் என்று கூறியுள்ளனர். நாங்கள் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா கூறுகின்றோம். மேலும் நாங்கள் இஸ்லாத்தின் எல்லா அடிப்படை அம்சங்கள் மற்றும் ஈமானின் அம்சங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். நாங்கள் திருக்குர்ஆன் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று நம்புகிறோம். எவ்வாறு அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளானோ அந்த வசனத்தை தொடக்கத்தில் ஓதினேன். அவ்வாறே முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் ஆக இருக்கின்றார்கள் என்பதை நாங்கள் முழு உறுதியுடன் நம்புகிறோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தெளிவாகவும் பல இடங்களில் இதை வெளிப்படுத்தியும் எழுதியுள்ளார்கள். அதாவது எவர் கத்மே நுபுவ்வத்தை மறுப்பாரோ அவர் மார்க்கமற்றவரும் இஸ்லாத்திலிருந்து வெளியில் சென்றவர் என்றும் எண்ணுகிறேன். அவர் அஹ்மதியும் அல்ல; முஸ்லிமும் அல்ல என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே, எங்களுக்கு எதிராக கூச்சல் எழுப்புவதும் எங்கள் மீது குற்றம் சுமத்துவதும் அதாவது நாங்கள் கத்மே நுபுவ்வத்திற்கு எதிரானவர்கள் (நவூதுபில்லாஹ்) என்றும், பெருமானார் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று நாங்கள் ஏற்கவில்லை என்பதும் மிகவும் கீழ்த்தரமான அறுவருப்பான குற்றச்சாட்டு ஆகும். இது எங்கள் மீது சுமத்தப்படுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாதம் செய்த காலத்திலிருந்தே இந்த குற்றச்சாட்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதும் சுமத்தப்படுகிறது. அவ்வப்போது இவர்களின் இந்த பொய்யான ஆதங்கம் வெளிப்படுகிறது. எப்பொழுதெல்லாம் இவர்கள் ஆதாயம் தேட விரும்புகின்றனரோ அப்போது நான் கூறியது போன்று இவர்கள் கூச்சலிடுகின்றனர் அல்லது பிரச்சனையைக் கிளப்புகின்றனர்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒருமுறை தமது குத்பாவில் இவ்வாறு கூறுகின்றார்கள்: எங்கள் மீது சுமத்தப்படும் இந்த குற்றச்சாட்டு பொய்யான –தாகும். நாங்கள் திருக்குர்ஆனை ஓதுகின்றோம். மேலும் திருக்குர்ஆன் மீது நம்பிக்கையும் வைக்கின்றோம். திருக்குர்ஆன் பெருமானார் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என்று கூறும்போது நாங்கள் அதை எவ்வாறு மறுக்க முடியும்? என்று கேட்குட்போது இதற்கு அஹ்மதி அல்லாத ஆலிம்கள் இந்த ஆட்சேபனையைக் கூறுகின்றனர். இதனையே மக்களுக்கும் கற்றுக் கொடுத்துள்ளனர். இந்த ஆட்சேபனை இன்றும் செய்யப்படுகிறது. மாறாக, பரஸ்பரம் உள்ள தொடர்புகள் மற்றும் ஊடகங்களினால் மற்ற ஆலிம்கள் மூலமாக மற்ற நாடுகளின் ஆலிம்களும் இந்த பாகிஸ்தானிய பெயர் தாங்கி ஆலிம்களின் தாக்கத்தின் கீழ் வந்து, அஹ்மதிகள் திருக்குர்ஆனையும் ஏற்பதில்லை. மிர்ஸா சாஹிபின் இல்ஹாம்களை திருக்குர்ஆனை விட உயர்வானதாகக் கருதுகின்றனர் (நவூதுபில்லாஹ்) என்று கூறுகின்றனர். (குத்பாத்தே மஹ்மூது ஜுமுஆ குத்பா 4 நவம்பர் 1955 தொகுதி 36 பக்கம் 222-223)

பல அரபிகள் உண்மை அறிந்து அஹ்மதிய்யத்தில் இணைகின்றனர். மேலும் கூறுகின்றனர்: நாங்கள் எங்கள் ஆலிம்களிடம் கேட்கும்போது அவர்கள், அஹ்மதிகள் திருக்குர்ஆனை ஏற்பதில்லை. அவர்கள் தங்களுக்கென்று வேறு குர்ஆனையோ அல்லது புத்தகத்தையோ உருவாக்கியுள்ளனர். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் இறுதி நபி என்பதை ஏற்பதில்லை. மாறாக, மிர்ஸா சாஹிபை இறுதி நபி என்கின்றனர். இவர்களது ஹஜ் வேறுபட்டது. இவர்கள் ஹஜ் செய்வதில்லை. இவர்களுடைய கிப்லா வேறு. இவர்கள் கஅபாவை நோக்கி தொழுவதில்லை என்று கூறுகின்றனர். ஆனால், நாங்கள் ஆராயும் போது பெயர்தாங்கி ஆலிம்களின் நிலை அம்பலமாகிறது என்று இவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறே அஹ்மதி அல்லாத ஆலிம்கள் தங்களின் பொய்க் குற்றச்சாட்டின் மூலமாக பலர் அஹ்மதிய்யத்தை ஏற்பதற்கு வழி வகுத்து விடுகின்றனர். இவர்கள் பொய் பேசி நமது தப்லீகின் பணியையும் ஒருவகையில் செய்கின்றனர். திருக்குர்ஆனை ஏற்காமல் இருப்பதும், பெருமானார் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று நம்பாமல் இருப்பதும் எவ்வாறு சாத்தியமாகும்?

ஏனென்றால், சுயமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இல்ஹாம்கள் திருக்குர்ஆனை இறை வேதமாக கூறுகிறது. அதனை அனைத்து நன்மைகளின் ஊற்று என்று கருதுகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் எனக் கூறுகிறது. இவ்வாறிருக்கையில் நாம் திருக்குர்ஆனை எவ்வாறு ஏற்காமல் இருக்க முடியும்? நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என்று எவ்வாறு ஏற்காமல் இருக்க முடியும்? இந்த வகையில் திருக்குர்ஆன் தொடர்பாக அன்னாரது ஓர் இல்ஹாம் உள்ளது. اَلْخَيْرُ كُلُّهٗ فِي الْقُرْآن – எல்லா நன்மையும் திருக்குர்ஆனில் உள்ளது. (அஞ்சாமே ஆத்தம். ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 57)

இது போன்றே அன்னார் எவர் குர்ஆனுக்கு கண்ணியமளிப்பாரோ அவர் விண்ணில் கண்ணியம் பெறுவார் எனக் கூறியுள்ளார்கள். (கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 13) அன்னார், எனது இல்ஹாமிற்கு கண்ணியம் வழங்குங்கள் என்று எங்கேயும் கூறவில்லை. அன்னாரது இல்ஹாம்கள் திருக்குர்ஆனிற்கு தொண்டு செய்பவையாகும். அதற்கு தனியான அல்லது நிரந்தரமான எந்த தகுதியும் இல்லை. எந்த நன்மை தேடுவதாக இருந்தாலும் எந்த வழிகாட்டலைத் தேடுவதாக இருந்தாலும் சமுதாயத்தின் எந்த பிரச்சனை தொடர்பாக நாம் வழிகாட்டல் பெறுவதாக இருந்தாலும் நாம் திருக்குர்ஆனில் இருந்துதான் பெறுகிறோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பல்வேறு இல்ஹாம்கள் அவற்றிற்கு விளக்கத்தை வழங்குகின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று எழுதியுள்ள அன்னாரது எண்ணற்ற எழுத்துக்கள் உள்ளன. அது தவிர காத்தமுன் நபிய்யீன் ஆக இருக்கின்றார்கள் என்ற வார்த்தை வரக்கூடிய இந்த இல்ஹாமும் உள்ளது. அந்த இல்ஹாம் இதுவாகும்: صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّآلِ مُحَمَّدٍ سَيِّدِ وُلْدِ آدَمَ وَخَاتَمِ النَّبِيِّيْن அதாவது, ஆதமின் சந்ததிகளின் தலைவரும் காத்தமுன் நபிய்யீனும் ஆகிய முஹம்மது (ஸல்) மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் தரூது (ஸலவாத்) ஓதுவீராக. (பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 411-412) இந்த இல்ஹாம் பல்வேறு சமயங்களில் இரண்டு அல்லது மூன்று முறை இறங்கியது. كُلُّ بَرَكَةٍ مِّنْ مُّحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ எல்லாவித அருளும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமே உள்ளது என்றும் ஓர் இல்ஹாம் இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 73)

பிறகு அன்னார் தனது நூலான தஜல்லியாத்தே இலாஹிய்யாவில் எழுதுகிறார்கள்: அதாவது நான் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தாக இருந்திருக்காவிட்டால் மேலும் அன்னாரைப் பின்பற்றாமல் இருந்திருந்தால் அனைத்து மலைகள் அளவிற்கு என்னுடைய செயல்கள் இருந்திருந்–தாலும் இறைவனுடன் உரையாடுவதற்கான இந்த அந்தஸ்தை என்னால் பெற்றிருக்க முடியாது. ஏனென்றால், தற்போது முஹம்மது (ஸல்) அவர்களது நுபுவ்வத்தைத் தவிர அனைத்து நுபுவ்வத்தும் முடிந்து விட்டன. (தஜல்லியாத்தே இலாஹிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 411-412)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றக் கூடியவர்கள் ஆவார்கள். அன்னாரது இல்ஹாம்களும் திருக்குர்ஆனை பின்பற்றக்கூடியவையும் அதனுடைய விளக்கமும் ஆகும். நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இல்ஹாம்களை திருக்குர்ஆனை விட மேலானவையாகக் கருதினால் நாங்கள் இன்று பொருள் தியாகங்கள் செய்து உலகம் முழுவதும் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பை வெளியிட்டு வருகிறோமே இதற்குப் பதிலாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இல்ஹாம்களை வெளியிட்டிருப்போம். தற்போது 75 மொழிகளில் திருக்குர்ஆன் முழுமையாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. சில மொழிகளில் மொழிபெயர்ப்பு நடைபெறுகிறது. 111 மொழிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்குர்ஆன் வசனங்களின் மொழிபெயர்ப்பு வெளியிடப்–பட்டுள்ளன. பெரிய பெரிய இஸ்லாமிய அரசுகளே! பண வசதி படைத்த அமைப்புகளே! நீங்கள் எத்தனை மொழிகளில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பை வெளியிட்டுள்ளீர்கள் என்று கூறுங்கள் பார்க்கலாம்.

காத்தமுன் நபிய்யீன் என்பதன் உண்மையான பொருளையும் அதன் ஆன்மாவையும் அஹ்மதி–களாகிய நாங்கள்தான் புரிந்துள்ளோம். மேலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனாக இருக்கின்றார்கள் என்ற அறிவிப்பை உலகின் பல்வேறு நாடுகளில் அந்த நாட்டின் அஹ்மதிகள்தான் வெளியிட்டு வருகிறார்கள். பிறகும் கூட இந்த மக்கள் அஹ்மதிகள் கத்மே நுபுவ்வத்தை மறுக்கக் கூடியவர்கள் என்று எங்கள் மீது குற்றம் சாட்டுகின்றனர் – நவூதுபில்லாஹ். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கத்மே நுபுவ்வத்தின் உண்மைத்துவத்தின் எப்படிப்பட்ட அறிவு மற்றும் ஞானத்தை வழங்கியுள்ளார்கள் என்றால் அதன் அருகில் கத்மே நுபுவ்வத்தின் கொடியை ஏந்துவதாக வாதம் புரியக்கூடிய இவர்களால் ஒருபோதும் செல்ல முடியாது. நாம் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனாக ஏற்றுக் கொள்கின்றோமா? என்ற கேள்விக்கு விரிவான விடையை வழங்கியவாறு ஒரு சபையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இதனையும் நினைவில் கொள்ளுங்கள். அதாவது நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என ஏற்பதில்லை என என் மீதும் என் ஜமாஅத்தினர் மீதும் குற்றம் சாட்டப்படுகிறது. இது எங்கள் மீது சாட்டப்படும் மிகப்பெரிய பொய் குற்றச்சாட்டாகும். நாங்கள் எந்த அளவு உண்மையான நம்பிக்கை, ஞானம் மற்றும் தெளிவுடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனாக இருக்கின்றார்கள் என்பதில் நம்பிக்கையும் உறுதியும் கொள்கிறோமோ அதில் இலட்சத்தில் ஒரு பங்கு கூட ஏனைய மக்கள் நம்பிக்கை கொள்வதில்லை. அவர்களுக்கு இப்படிப்பட்ட அறிவுத் திறனே கிடையாது. அவர்கள் காத்தமுல் அன்பியாவின், கத்மே நுபுவ்வத்தில் உள்ள உண்மை மற்றும் இரகசியத்தை புரிவதே இல்லை. அவர்கள் தங்கள் மூதாதையர்களிடம் இருந்து இந்த வார்த்தையைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதன் உண்மைத்தன்மையைப் புரியாதவர்களாவார்கள். அவர்களுக்கு கத்மே நுபுவ்வத் என்றால் என்ன? அதன் மீது நம்பிக்கை கொள்வதன் பொருள் என்ன? என்பது கூட தெரியாது. ஆனால் நாங்கள், அல்லாஹ் சிறந்ததாகக் கருதக்கூடிய அந்த நிலையான பார்வையுடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியாவாக இருக்கின்றார்கள் என்று நம்பிக்கை கொள்கிறோம். மேலும் அல்லாஹ் எங்கள் மீது கத்மே நுபுவ்வத்தின் உண்மையை எவ்வாறு திறந்துள்ளான் என்றால் அந்த இறை ஞானத்தின் பானம் எங்களுக்கு வழங்கப்–பட்டுள்ளது. அதில் ஒரு சிறப்பான இன்பத்தை நாங்கள் அடைகிறோம். இந்த ஊற்றிலிருந்து பருகியவரை தவிர அதனைப் பற்றி வேறு யாராலும் கணிக்க முடியாது.

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

பிறகு கத்மே நுபுவ்வத்தின் உண்மைத் தன்மையை விளக்கியவாறு அன்னார் கூறுகிறார்கள்: அதாவது அல்லாஹ் நமக்கு காத்தமுல் முஃமினாக (நம்பிக்கையாளர்களில் சிறப்பானவராக), காத்தமுல் ஆரிஃபீனாக (இறைஞானம் பெற்றவர்களில் சிறப்பானவராக), காத்முன் நபிய்யீனாக (நபிமார்களில் சிறப்பானவராக) இருக்கக்கூடிய அந்த நபியை வழங்கியிருக்கின்றான். அவ்வாறே ஜாமிஉல் குதுப் (அனைத்து வேதங்களையும் உள்ளடக்கிய) மற்றும் காத்தமுல் குதுபாக இருக்கக்கூடிய அந்த வேதத்தை அன்னார் மீது இறக்கியுள்ளான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள். அன்னார் மீது நுபுவ்வத் முடிவடைந்து விட்டது. இந்த நுபுவ்வத் ஒருவரை கழுத்தை நெறித்து முடிவுக்குக் கொண்டு வருவது போன்று அல்ல. இவ்வாறு செய்வது எவ்வித பெருமைக்குரியதுமில்லை. மாறாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நுபுவ்வத் முடிவு பெற்று விட்டது என்பதன் பொருள் இயல்பாக நுபுவ்வத்தின் அந்தஸ்துகள் அன்னாரின் மீது முற்றுப் பெற்று விட்டது. அதாவது ஆதம் முதல் ஈஸா (அலை) அவர்கள் வரை நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அந்த பலதரப்பட்ட அந்தஸ்துகள் அனைத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஒன்றிணைக்கப்பட்டு விட்டது. இவ்வாறு அன்னார் இயல்பாக காத்தமுன் நபிய்யீன் ஆனார்கள். இவ்வாறே முன்னர் இருந்த பல்வேறு வேதங்களில் தொடர்ந்து வந்து கொண்டிருந்த அறிவுரைகள் மற்றும் ஞானங்கள் போன்றவை திருக்குர்ஆனில் வந்து முற்றுப் பெற்றன. இவ்வாறு திருக்குர்அன் காத்தமுல் குதுப் ஆனது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 342; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆக, நமது எதிரிகள் அறியாமல் இருக்கும் உண்மை இதுவாகும். மேலும் ஆலிம்களின் கைகளில் மாட்டிக்கொண்டிருக்கும் மக்களை அவர்கள் தனது பிடியிலிருந்து வெளியே வர விடுவதேயில்லை. ஒருவேளை அவர்களின் பின்னால் செல்லக் கூடியவர்களுக்கு இந்த உண்மை தெரிய வந்தால் பிறகு மார்க்கத்தை வியாபாரமாக்கி வைத்துள்ள அவர்களின் அந்த வியாபாரம் நடைபெறாது.

காத்தமுன் நபிய்யீன் என்பதன் பொருளை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

கத்முன் நுபுவ்வத் தொடர்பாக நான் மீண்டும் இதனைக் கூற விரும்புகின்றேன். காத்தமுன் நபிய்யீன் என்பதன் வெளிப்படையான பொருள், ஆதம் (அலை) அவர்களது காலத்திலிருந்து ஆரம்பமான நபித்துவத்தின் அனைத்து விஷயங்களும் பெருமானார் (ஸல்) அவர்களின் வருகையுடன் அதன் நிறைவை எட்டிவிட்டது. இரண்டாவது பொருள், நபித்துவத்தின் சிறப்புகளின் வட்டமானது பெருமானார் (ஸல்) அவர்களுடன் நிறைவடைந்துவிட்டது. திருக்குர்ஆன் குறையுள்ள விஷயங்களை முழுமைபடுத்தி விட்டது. மேலும், நபித்துவம் அதன் நிறைவை எட்டிவிட்டது. (அதாவது திருக்குர்ஆனின் போதனைகளில் முந்தைய நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அந்த அனைத்து விஷயங்களும் இருந்தன. ஆனால், அவற்றின் தரம் அந்த அளவு உயர்ந்த நிலையில் இருக்கவில்லை. திருக்குர்ஆனின் போதனைகளின் மூலம் அவை அதன் முழுமையை அடைந்து விட்டன. பெருமானார் (ஸல்) அவர்கள் மீது திருக்குர்ஆன் என்ற முழுமையான மார்க்கச் சட்டம் இறங்கியது. மேலும், இங்கு நபித்துவம் அதன் நிறைவை எட்டிவிட்டது. எந்த ஒரு மனிதனாலும் திருக்குர்ஆன் மூலமாக ஒருவர் அடைய முடிந்த முழுமையான சிறப்பை விட மேலும் அதிகமான சிறப்பை ஒருபோதும் பெற முடியாது. அத்தகைய ஒரு வேதம்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது இறங்கியது.)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவேதான் اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ அதாவது, இன்றைய நாளில் நாம் உங்கள் மீது மார்க்கத்தை முழுமையடையச் செய்து விட்டோம்.(15:4) என்பது இஸ்லாத்திற்கு பொருந்துகிறது. சுருக்கமாக, இவை நபித்துவத்தின் அடையாளங்களாகும். அவற்றின் நிலைமை மற்றும் அதன் ஆழம் பற்றி விவாதம் செய்ய வேண்டிய எந்த தேவையும் இல்லை. அதன் கொள்கை தெளிவாகவும் ஒளிமயமாகவும் இருக்கின்றது. அவை நிரூபிக்கப்பட்ட உண்மைகள் என்று கூறப்படுகின்றது.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: ‘‘நம்பிக்கை கொண்டவர் இந்த விஷயங்களை சர்ச்சை செய்ய வேண்டிய தேவையில்லை. அவற்றின் மீது நம்பிக்கை கொள்வது அவசியமானதாகும். ஏதாவதொரு எதிரி ஆட்சேபனை செய்தால் நாம் அவரை தடுத்து நிறுத்த முடியும். அவர் அமைதியாக இருக்கா விட்டால் முதலில் நீங்கள் பல சிறு பகுதிகளாக தென்படுகின்ற உங்களது மார்க்க விவகாரங்களுக்கான ஆதாரத்தை தாருங்கள் என்று நாம் அவர்களிடம் கூற முடியும். சுருக்கமாக, நபித்துவ முத்திரையானது பெருமானார் (ஸல்) அவர்களின் நபித்துவ அடையாளங்களில் ஓர் அடையாளமாகும். அதன் மீது நம்பிக்கை கொள்வது நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அவசியமானதாகும்.’’ (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 286-287; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே, நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்றே எவராவது கத்முன் நுபுவ்வத்தை மறுப்பவராக இருந்தால் பிறகு அவர் முஸ்லிமே அல்ல. பிறகு அவர் இஸ்லாத்தின் வட்டத்தை விட்டே வெளியே சென்று விடுகின்றார் என்றே ஹுஸூர் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

பிறகு கதமுன் நுபுவ்வத்தின் அந்தஸ்து, இஸ்லாத்தின் மேன்மை, ஏனைய மதங்களின் மீது அதற்கு எவ்வகையில் மேன்மை இருக்கின்றது என்பதை நிரூபித்துக் காட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். கத்முன் நுபுவ்வத்தை நாம் இவ்வாறு புரிந்து கொள்ள முடியும். எங்கு ஆதாரங்களும் இறைஞானமும் இயல்பாகவே நிறைவு பெற்று விடுகின்றதோ அந்த எல்லைதான் கதமுன் நுபுவ்வத் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இதற்கு பிறகு மார்க்கமற்றவர்களை போன்று விமர்சிப்பது ஈமான் இல்லாதவர்களின் பணியாகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஒவ்வொரு விஷயத்திலும் தெளிவான அடையாளங்கள் இருக்கின்றன. அவற்றைப் புரிந்து கொள்வதற்கு முழுமையான இறைஞானமும் அகப்பார்வையின் ஒளியும் தேவைப்படுகின்றது. (மனிதனுக்கு முழுமையான இறைஞானமும் மார்க்க அறிவும் அல்லாஹ்விடம் இருந்து ஒளியும் கிடைத்தால்தான் இந்த எல்லா விஷயங்களையும் புரிந்து கொள்ள முடியும்).

பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வருகையின் மூலமாக ஈமானும் இறைஞானமும் முழுமையடைந்தது. மற்ற சமுதாயங்களுக்கும் ஒளி எட்டியது. வேறு எந்த ஒரு சமுதாயத்திற்கும் இந்த அளவு தெளிவான ஒளிமயமான ஷரீஅத் கிடைக்கவில்லை. அவ்வாறு கிடைத்திருந்தால் பிறகு அவற்றால் அரபு நாட்டைச் சார்ந்தவர்கள் மீது அதனால் தனது எந்த ஒரு தாக்கத்தையும் ஏன் ஏற்படுத்த முடியவில்லை? (ஏனைய சமுதாயங்களுக்கு முழுமை பெற்ற ஷரீஅத் கிடைக்கவில்லை. வந்த நபிமார்கள் அனைவரும் தத்தமது பகுதியில் உள்ளாவர்களுக்காக வந்தனர். இது அரபு நாட்டில் உள்ளவர்களுக்கு இறைவனை பற்றியோ அல்லது மார்க்கத்தை பற்றியோ எதுவும் தெரியாது என்பதற்காக ஆதாரமாகும். எவர்களது அறிவில் இவ்விஷயங்கள் இருந்தனவோ எவர்களுக்கு மற்றவர்களுடன் தொடர்பு இருந்ததோ அவர்களும் கூட ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால்,

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS
All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

முழுமை பெற்ற ஷரீஅத்தும் முழுமையான ஒளியும் அவர்களிடம் இருக்கவில்லை. முன்னர் இருந்த மார்க்கங்களில் முழுமையான ஒளி இருந்திருந்தால் அரபு நாட்டு மக்கள் மீதும் அதன் தாக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும்.)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அரபு நாட்டிலிருந்து அந்த சூரியன் உதித்தது. அது ஒவ்வொரு சமுதாயத்தையும் ஒளிமயமானதாக ஆக்கியது. ஒவ்வொரு பள்ளத்திலும் அது தனது ஒளியை இட்டது. (இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்தாகும். அவர்கள் ஒளிமயமான சூரியன் ஆவார்கள். அவர்கள் ஒவ்வொரு சமுதாயத்தையும் ஒளிமயமானதாக ஆக்கினார்கள். ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு மூலையிலும், ஒவ்வொரு நகரத்திலும் அவர்களது ஒளி எட்டியது).

தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனுக்கு இந்த பெருமை கிடைத்திருக்கின்றது. அதனால் ஓரிறைமை மற்றும் நபித்துவம் பற்றிய விஷயங்களில் உலகில் உள்ள எல்லா மதங்களையும் வெற்றி கொள்ள முடியும். (ஓரிறைமை மற்றும் நபித்துவம் தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ள விஷயங்கள் எத்தகைய ஆதாரங்களாகத் திகழ்கின்றன என்றால் அதுபோன்ற ஆதாரங்கள் முன்னர் எந்த மார்க்கத்திற்கும் வழங்கப்பட –வில்லை. இதுவே ஷரீஅத் முழுமை பெற்றுவிட்டது மற்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனாக இருக்கின்றார்கள் என்பதன் பொருளாகும்).

தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அத்தகைய ஒரு வேதம் முஸ்லிம்களுக்கும் கிடைத்திருப்பது பெருமை கொள்ளத்தக்கதாகும். எவர்கள் இஸ்லாத்தின் போதனைகள் மற்றும் வழிகாட்டல்கள் மீது ஆட்சேபனை செய்கின்றார்களோ அவர்கள் அகத்தில் ஒளியில்லாத நிலையில் ஈமான் இல்லாத நிலையில் பேசுகின்றனர். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 283; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆக, இஸ்லாம் அரபு நாட்டில் இருந்து வெளியேறி உலகின் எல்லா மூலைகளிலும் பரவி விட்டது. இன்று வரை அது தனது உண்மையான போதனைகளுடன் உலகின் ஒவ்வொரு மூலைகளிலும பரவிக்கொண்டிருக்கின்றது.

இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் தனது அனைத்து ஆற்றல் மற்றும் வசதியைக் கொண்டு ஏகத்துவம் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நுபுவத்தின் அந்தஸ்தை உலகின் ஒவ்வொரு பகுதியிலும், கிராமங்களிலும், தெருக்களிலும் பரப்பி வருகின்றது. ஆக, நாங்கள்தான் கத்மே நுபுவத் பற்றியும், அன்னார் மீது இறங்கிய ஷரீஅத்தைப் பற்றியும் சரியாகப் புரிந்து வைத்துள்ளோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் ஏனைய மதத்தினருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்தைப் பற்றி தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். அன்னாரின் அந்தஸ்தைப் பற்றி மட்டும் எடுத்துரைக்கவில்லை. மாறாக, இதற்கு முன்னர் இருந்த நபிமார்களின் போதனைகள் எந்த அளவுக்கு மாறிவிட்டன என்றால் அந்த நபிமார்களின் அந்தஸ்து மற்றும் அவர்களின் உண்மைத்துவம்பற்றி அவர்கள் உண்மையாளர்களா? இல்லையா? என அறிய முடியாமல் இருந்தது. அன்னார்தான் முந்தைய நபிமார்களின் நிலைமை மற்றும் உண்மைத்துவத்தை வெளிப்படுத்தினார்கள். இதுவும் அன்னாரது உயர்ந்த அந்தஸ்து என எடுத்துரைத்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: மனித ஆற்றல்களை முழுமையான முறையில் சீர்திருத்தி அவற்றிக்கு போதுமானதாக இருக்கின்ற போதனயே முழுமை பெற்ற போதனையாக இருக்க முடியும். அது அல்லாமல் ஒரே அம்சத்தை மட்டும் வலியுறுத்தக்கூடியதாக அது இருக்கக் கூடாது. பைபிளின் போதனை என்ன கூறுகின்றது என்று பாருங்கள். அதற்கு எதிரில் மனித ஆற்றல்கள் என்ன போதனையை வழங்குகிறது என்பதையும் பாருங்கள். மனித ஆற்றலும் இயல்பும் இறைவனின் செயலளவிலான வேதமாகும். (மனிதனின் ஆற்றலும் அவனது இயல்பும் இறை வேதத்தின் செயலளவிலான வெளிப்பாடாக இருக்கின்றது)

தொடர்ந்து கூறுகின்றார்கள்: அவனது வார்த்தைகளுள்ள வேதம் இறைவேதம் என்று அழைக்கப்படுகின்றது அல்லது அதனை இறைவனின் போதனைகள் என்றும் கூறலாம். அது மனிதன் வடிவமைக்கப்பட்டதற்கு எதிராகவும் அதற்கு முரணாகவும் எப்படி இருக்க முடியும்? இவ்வாறே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வராமல் இருந்திருந்தால் கடந்த கால நபிமார்களின் நல்லொழுக்கம், நேர்வழி, அற்புதங்கள், தூய்மைபடுத்தும் ஆற்றல் ஆகியவற்றின் மீது ஆட்சேபனைகள் எழுந்திருக்கும். ஆனால், ரஸூல் (ஸல்) அவர்கள் தோன்றி அந்த அனைவரும் தூயவர்கள் என்பதை உறுதிப்படுத்தினார்கள். இதனால்தான் அன்னாரது நபித்துவத்தின் அடையாளங்கள் சூரியனை விட அதிகமாக ஒளிமயமானவையாக இருக்கின்றன. அந்த அடையாளங்கள் எண்ணிலடங்காதவையாகும். எனவே, அவர்களது நபித்துவம் அல்லது அடையாளங்கள் மீது ஆட்சேபனை செய்வது பகல் உதயமாகி இருக்கும் நிலையில் ஒரு பார்வை இல்லாத முட்டாள் இப்போது இரவாக இருக்கின்றது என்று கூறுவதைப் போன்றதாகும். நான் மீண்டும் கூறுகின்றேன். இன்று வரை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வராமல் இருந்திருந்தால் ஏனைய மதங்கள் இருளில்தான் இருந்திருக்கும்; ஈமான் அழிந்து போயிருக்கும், பூமி சாபம் மற்றும் இறை தண்டனையினால் அழிக்கப்பட்டிருக்கும். இஸ்லாம் தீபத்தைப் போன்று ஒளிமயமானதாக இருக்கின்றது. அது மற்றவர்களையும் இருளிலிருந்து வெளியேற்றி விட்டது. தவ்ராத்தை படித்துப் பார்த்தால் அதில் சுவர்க்கம் மற்றும் நரகம் பற்றி எதுவும் நமக்கு தெரிய முடியாது. பைபிளைப் பார்க்கும்போது அதில் ஓரிறைமையின் அடையாளம் கிடைக்கவில்லை. இந்த இரண்டு வேதங்களும் இறைவன் புறமிருந்து வந்திருந்தவையேயாகும். இப்போதும் அப்படித் தான் அவை இருக்கின்றன. ஆனால் அவற்றில் இருந்து என்ன ஒளி கிடைக்க முடியும்? என்பதை கூறுங்கள். ஈடேற்றத்திற்காக தேவைப்படுகின்ற உண்மையான ஒளியும் பிரகாசமும் இஸ்லாமே ஆகும். ஓரிறைமை தொடர்பாக மட்டும் திருக்குர்ஆனை திறந்து நீங்கள் பார்த்தால் அது இறைவனுக்கு இணைவைத்தலின் வேரை வெட்டுகின்ற கூர்மையான வாளாகத் தென்படுகின்றது. அவ்வாறே நபித்துவத்தின் எல்லா அம்சங்களும் எந்த அளவு தெளிவாகவும் ஒளிமயமாகவும் அதன் மூலமாக தென்படுகின்றது என்றால் அதைவிட அதிகமாக அவை இருப்பது சாத்தியமற்றதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 282-283; 1985 ஆம் ஆண்டு பதிப்பு. இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது). இதுவே அவர்கள் கதமுன் நுபுவ்வத் தொடர்பாக நமக்கு வழங்கியுள்ள அறிவாகும்.

இன்றைய ஆலிம்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது ஆட்சேபனைகளைக் கூறி வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஏனைய மதங்களுக்கு அந்த மதங்களின் உண்மை முகத்தைக் காட்டி அவர்களது குறைகளை எடுத்துக் காட்டுவதற்கு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மையை நிரூபிப்தற்குத் தைரியம் இல்லை. இந்த பணியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தர்பிய்யத் மற்றும் ஞானத்தின் மூலம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் செய்து கொண்டிருக்கிறது. அவ்வாறிருந்தும் கூட இவர்களது பார்வையில் நாம் காஃபிர்; அவர்கள் முஸ்லிம்கள் ஆவர்.


B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000



National
Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house A/c
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

தனது வாதத்தின் உண்மையை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: சுயமே தன்னை நபி என்றும் தூதர் என்றும் வாதம் செய்கின்ற, இறைவன் மீது பொய்யைப் புனைந்து கூறுகின்ற பாக்கியமற்ற ஒருவன் திருக்குர்ஆன் மீது நம்பிக்கை கொள்ள முடியுமா? மேலும் எந்த நபர் திருக்குர்ஆன் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளாரோ, وَلٰكِنْ رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ என்ற வசனத்தின் மீது உறுதி கொள்கின்றாரோ அவர், நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிறகு ரஸூலாகவும் நபியாகவும் இருக்கின்றேன் என்று கூற முடியுமா? நீதியை விரும்புகின்ற ஒருவர் நினைவில் கொள்ள வேண்டும். இந்த எளியவன் எந்த ஒரு சமயத்திலும் உண்மையான முறையில் நபியாக அல்லது தூதராக இருப்பதாக வாதம் செய்யவில்லை. உருவகமாக ஒரு சொல்லை பயன்படுத்துவதும் அகராதியில் அதற்கு காணப்படுகின்ற பொதுவான பொருள்களின் அடிப்படையில் அதனை பேசும்போது கொண்டு வருவதும் ஒருவரை காஃபிராக்கி விடாது. ஆனால், பொதுவாக முஸ்லிம்களுக்கு இதில் ஏமாறுவதற்கு வாய்ப்பு இருப்பதால் நான் அதைக் கூட விரும்பவில்லை. ஆனால், அல்லாஹ் என்னுடன் பேசிய அந்த உரையாடல்களில் நபித்துவம் மற்றும் தூதுத்துவம் என்ற இந்த சொல் அதிகமாக வந்திருக்கின்றது. இறைவனால் நியமிக்கப்பட்டவ –னாக நான் இருக்கின்ற காரணத்தால் அவற்றை என்னால் மறைக்க முடியாது. (அல்லாஹ் இதனை என்னிடம் கூறியிருப்பதால் இதை நான் மறைக்க முடியாது).

தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆனால், நான் மீண்டும் மீண்டும் கூறுகின்றேன். இந்த இறை அறிவிப்புகளில் என்னைப் பற்றி முர்ஸல் (இறைவனால் அனுப்பட்டவர்) அல்லது ரஸூல் அல்லது நபி என்ற சொற்கள் வந்துள்ளனவோ அவை அதன் உண்மையான பொருளில் பயன்படுத்தப்படவில்லை. எந்த உண்மைக்கு நான் முழுமையான முறையில் சாட்சி பகர்கின்றேனோ அது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியாவாக இருக்கின்றார்கள். அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் வரமாட்டார். எந்த பழைய நபியும் புதிய நபியும் வரமாட்டார்.

وَمَنْ قَالَ بَعْدَ رَسُوْلِنَا وَسَيِّدِنَا اِنِّيْ نَبِيٌّ اَوْ رَسُوْلٌ عَلٰى وَجْهِ الْحَقِيْقَةِ
وَالْاِفْتِرَاءِ وَتَرَكَ الْقُرْاٰنَ وَاَحْكَامَ الشَّرِيْعَةِ الْغَرَّاءِ فَهُوَ كَافِرٌ كَذَّابٌ

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சுருக்கமாக, நமது மார்க்கம் இதுவேயாகும். எந்த நபர் உண்மையான முறையில் நபித்துவ வாதம் புரிகின்றாரோ, மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமுள்ள அருள்களிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு தனியாக சென்று அந்த தூய தலையூற்றிலிருந்து பிரிந்து சென்று தானே நேரடியாக அல்லாஹ்வின் நபியாக ஆக விரும்புகின்றாரோ அவர் மார்க்கமற்றவராவார். மேலும், அத்தகைய நபர் பெரும்பாலும் தனது ஒரு புதிய கலிமாவை உருவாக்குவார். இறைவனை வணங்குவதிலும் ஏதாவதொரு புதிய வழிமுறையை உருவாக்குவார். இறைகட்டளைகளிலும் சில மாற்றங்களை ஏற்படுத்திவிடுவார். அத்தகையவர் சந்தேகமின்றி முஸைலமா கஸ்ஸாபின் சகோதரராக இருக்கின்றார். அவர் காஃபிராகி விட்டார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அத்தகைய தீயவர் தொடர்பாக அவர் திருக்குர்ஆனின் மீது நம்பிக்கை வைத்துள்ளார் என்று எப்படி கூற முடியும்? (அஞ்சாமே ஆத்தம். ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 27-28 அடிக்குறிப்பு)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடியாராக இருந்து அவர்களது ஷரீஅத்தைப் பின்பற்றி நடப்பவருக்கு இந்தக் கண்ணியம் கிடைக்கும். மற்றவர்களுக்கு இது கிடைக்காது. அவர்களது அடியாராக இருப்பதை விட்டு விட்டு வெளியே சென்று ஒருவர் தன்னை முஸ்லிம் என்று கூறிக் கொள்ள முடியாது.

இதற்கு மேலும் விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். நாங்கள் இறைவனின் வேதமாகிய திருக்குர்ஆன் மீது நம்பிக்கை கொள்கிறோம். மேலும், எங்களது தலைவர் முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனது ரஸூல் மற்றும் நபி ஆவார் என்றும், அன்னார் தலைசிறந்த மார்க்கத்தைக் கொண்டு வந்தார்கள் என்றும் நம்பிக்கை கொள்கின்றோம். மேலும், அன்னார் காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள் என்றும் அன்னாருக்குப் பிறகு அன்னாரின் தர்பிய்யத்திலிருந்து பலன் பெற்றவரைத் தவிர எந்த நபியும் இல்லை என்றும் நம்பிக்கை கொள்கிறோம். மேலும், எவர் திருக்குர்ஆனில் ஏதாவது ஒன்றை கூட்டுவாரோ அல்லது ஏதாவது ஒரு பகுதியை குறைப்பாரோ அவர் ஷய்த்தானும் தீயவரும் ஆவார். மேலும், நாங்கள் கத்மே நுபுவ்வத்திற்கு அல்லாஹ்வின் அனைத்து ரஸூல்மார்கள் மற்றும் அனைத்து நபிமார்களையும் விட மேலான நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நுவ்வத்தின் அனைத்து அந்தஸ்துகளும் முழுமை அடைந்து விட்டன எனப் பொருள் கொள்கிறோம். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நுபுவ்வத் அந்தஸ்தை அன்னாருடைய உம்மத்தை சார்ந்தவரால் அன்னாரை முழுமையாகப் பின்பற்றுவரால், அன்னாரின் ஆன்மீகத்திலிருந்தே அனைத்து நன்மையையும் பெற்றவரால், அன்னாருடைய ஒளியிலிருந்து ஒளிமயமானவரால் மட்டுமே பெற முடியும் என நம்பிக்கை கொள்கிறோம். இதில் எவ்வித அநீதியும் இல்லை. இதில் எவ்வித தன்மானம் கொள்வதற்கான இடமில்லை. இதில் எவ்வித தனியான நுபுவ்வத்தும் இல்லை. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. மாறாக, இவர் மற்றொரு கண்ணாடியில் தோன்றிய அஹ்மது முஜ்தபா ஆவார்கள். அல்லாஹ் கண்ணாடியில் காட்டிய தோற்றத்தைக் கண்டு எவரும் தன்மானம் கொள்ள மாட்டார். ஏனென்றால், மாணவர் மீது பிள்ளைகள் மீது தன்மானம் பொங்காது. ஆக, எவர் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அருள்களைப் பெற்று அன்னார் மீது தன்னை மாய்த்துக் கொண்டு வருவாரோ அவர் உண்மையில் அவரே ஆவார். ஏனென்றால், அவர் முழுமையான அர்ப்பணிப்பின் அந்தஸ்தில் இருப்பார். அன்னாரது பண்பை மேற்கொண்டவராக இருப்பார். அன்னாரிடம் இருந்தே தனது ஆன்மீகத்தைப் பெற்றவராக இருப்பார். அன்னாரது அருளினாலேயே உயர் தகுதியை அடைந்திருப்பார். இதுவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள்களுக்கு சாட்சியாக விளங்கக்கூடிய உண்மையாகும். மக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகை, தனது மேலான அன்பு மற்றும் பரிசுத்தத்தின் காரணமாக அன்னாரிடத்தில் தன்னை மாய்த்துக் கொண்ட அன்னாரைப் பின்பற்றக் கூடியவரின் ஆடையில் பார்ப்பார்கள். அவருக்கு எதிராகப் பேசுவது அறிவீனமாகும். ஏனென்றால், இது நபி (ஸல்) அவர்கள் அப்தர் (ஆண் சந்ததியற்றவர்) இல்லை என்பதற்கு அல்லாஹ்விடமிருந்து வந்த ஆதாரம் ஆகும். சிந்திக்கக் கூடியவருக்கு இதை விளக்கிக் கூறத் தேவையில்லை.

மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பௌதீக ரீதியில் எந்த ஆண்களுக்கும் தந்தையில்லை. ஆனால், நுபுவ்வத்தின் அருள் என்ற ரீதியில் ஆன்மீகத்தில் உயர்வைப் பெற்ற ஒவ்வொரு–வருக்கும் தந்தையாவார்கள். அன்னார் அனைத்து நபிமார்களின் முத்திரையும். (இறைவனால்) ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களின் தலைவரும் ஆவார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முத்திரை பெற்றவரால், அன்னாரது நடைமுறையைப் பின்பற்றுபவரால் மட்டுமே தற்பொழுது இறை சன்னிதியில் நுழைய முடியும். தற்பொழுது எந்த செயலும் எந்த இபாதத்தும் அன்னாரது நபித்துவத்தை ஏற்காமல், அன்னாரது மார்க்கத்தில் உறுதியாக நிலைபெற்று நிற்காமல் இறைவனிடத்தில் ஏற்றுக் கொள்ளப்படாது. மேலும் அன்னாரை விட்டு விலகி, தனது ஆற்றல் மற்றும் சக்திக்கேற்ப அன்னாரைப் பின்பற்றாதவர் அழிந்து போய் விட்டார். அன்னாருக்குப் பிறகு எவ்வித ஷரீஅத்தும் வர முடியாது. எவராலும் அன்னாரது வேதத்தை அன்னாரது போதனைகளை ரத்து செய்யவும் முடியாது. எவராலும் அன்னாரது பரிசுத்தக் கூற்றுக்களை மாற்றவும் முடியாது. எந்தவொரு மழையும் அன்னாரது திருக்குர்ஆனின் அடை மழையைப் போன்று ஆக முடியாது. எவர் திருக்குர்ஆனைப் பின்பற்றுவதில் சிறிதளவும் தூரம் விலகுவாரோ அவர் ஈமானின் வட்டத்தில் இருந்து வெளியேறி விட்டார். நபிகள் நாயகம் (ஸல்)

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

**0422-2399980, 4351980**
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

அவர்களிடமிருந்து உறுதியான இந்த விஷயங்களைப் பின்பற்றாதவரை எவராலும் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையைக் கூட விடக்கூடியவர் வழிதவறி விட்டார். மேலும் எவர் இந்த உம்மத்தில் நுபுவ்வத்திற்கான வாதம் புரிவாரோ அவர் தன்னை சிறந்த மனிதராகிய முஹம்மது (ஸல்) அவர்களிடமிருந்து தர்பிய்யத்தைப் பெற்றவர் என்றும், அன்னாரது சிறந்த முன்மாதிரி இன்றி இவையனைத்தும் ஒன்றுமற்றவையாகும் என்றும் திருக்குர்ஆன் கார்த்தமுஷ் ஷரீஆ (ஷரீஅத்துகளிலெல்லாம் சிறந்த ஷரீஅத்) என்றும் உறுதி கொள்ள மாட்டாரோ அவர் அழிந்து போய் விட்டார். அவர் காஃபிர்களுடனும் தீயவர்களுடனும் சென்று சேர்ந்து விட்டார். எவர் நபித்துவத்திற்கான வாதம் புரிவாரோ அவர் தன்னை நபி (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவர் என்றும், தான் பெற்றதெல்லாம் நபி (ஸல்) அவர்களின் அருளினால் பெற்றவை என்றும், இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோட்டத்தின் ஒரு கனி என்றும், அன்னாரது அடை மழையின் ஒரு துளி என்றும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளியின் ஒரு கதிர் என்றும் நம்பிக்கை கொள்ள மாட்டாரோ அவர் சாபத்திற்குரியவர் ஆவார். அவர் மீது, அவரது நண்பர்கள் மீது, அவரை பின்பற்றக் கூடியவர் மீது, அவரது உதவியாளர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வானத்தின் கீழ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர வேறெந்த நபியும் இல்லை. திருக்குர்ஆனைத் தவிர நமக்கு வேறெந்த வேத நூலும் இல்லை. மேலும் எவர் இதற்கு எதிராக செயல்படுவாரோ அவர் தன்னைத்தானே நரகத்தின் பால் கொண்டு சென்று விட்டார். (மவாஹிபுர் ரஹ்மான். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 285-287. த.்ப்ஸீர் மஸீஹ் மவ்ஊது. சூரா அஹ்ஸாப் வசனம் 41 -ற்கான விளக்கம் பக்கம் 699-701)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எண்ணற்ற இடங்களில் கத்மே நுபுவ்வத்தின் உண்மைத்துவம் பற்றியும் அதன் அந்தஸ்து மற்றும் தனது அந்தஸ்து பற்றியும் தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார்கள். அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: ‘‘முஸ்லிம்கள் தங்கள் மார்க்கத்தில் நிலைத்திருந்தால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான முறையில் பின்பற்றுபவர்களாக இருந்தால் பிறகு நான் வர வேண்டிய தேவை என்ன இருக்கின்றது?’’

பிறகு ஓர் இடத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘உலக உதாரணங்களிலிருந்து கதமுன் நுபுவ்வத்திற்கான உதாரணத்தை நாம் இவ்வாறு கூறலாம். அதாவது, நிலவு முதல் பிறையிலிருந்து ஆரம்பமாகிறது. பதினான்காவது இரவில் அது தனது முழுமையை அடைகின்றது. அப்போது அதை பத்ர் என்று நாம் கூறுகின்றோம். இவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையால் நபித்துவத்தின் சிறப்புகள் முழுமை பெற்று விட்டன. எவர்கள் நபித்துவம் வலுக்கட்டாயமாக முடிவுக்கு வந்து விட்டது என்ற கொள்கையை உடையவராக இருக்கின்றார்களோ, மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மத்தாவின் மகள் யூனுஸை விட முன்னுரிமை வழங்கக் கூடாது என்ற கொள்கையை உடையவராக இருக்கின்றனரோ அவர்கள் இந்த உண்மையை புரியவே இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்புகள் பற்றி அவர்களுக்கு எந்த அறிவும் இல்லை. அவர்களது அறிவில் பலவீனமும் குறைவான அறிவும் அவர்களுக்கு இருந்தும் கூட அவர்கள் நம்மை பற்றி நாம் கதமுன் நுபுவ்வத்தை மறுப்பவர்களாக இருக்கின்றோம் என்று கூறுகின்றனர். நான் அத்தகைய நோயாளிகளுக்காக என்ன செய்வேன்? அவர்களுக்காக எவ்விதத்தில் நான் வருந்த முடியும்? அவர்களுக்கு இந்த நிலைமை ஏற்படாமல் இருந்திருந்தால் அவர்கள் இஸ்லாத்தின் உண்மை நிலையிலிருந்து முற்றிலுமாக தொலைவில் விலகிச் சென்றிருக்க மாட்டார்கள். அவர்களது ஈமானின் நிலை சரியாக இருந்திருந்தால் எனது வருகையின் தேவை என்ன இருந்தது? அவர்களது ஈமானின் நிலை மிகவும் பலவீனமானதாக ஆகி விட்டது. மேலும் அவர்கள் இஸ்லாத்தின் குறிக்கோள் மற்றும் அதன் கருத்தை முற்றிலும் அறியாதவர்களாக இருக்கின்றனர். அது அல்லாமல் அவர்கள் உண்மையை சார்ந்திருப்பவர்களுடன் பகைமை கொள்வதற்கு வேறு எந்தக் காரணமும் இருக்க முடியாது. அதன் விளைவு அவர்களை காஃபிர்களாக ஆக்கி விடுகின்றது.’’ (மல்.்.பூஸாத் தொகுதி 1 பக்கம் 342-343; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இறைவன் புறமிருந்து அனுப்பட்டுள்ள இவர்களே உண்மையின் பக்கம் நிற்கின்றார்கள். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது முழுமையான நம்பிக்கை கொண்டிருக்கின்றார். அவருடன் பகைமை கொள்வதற்கான எந்த காரணமும் இல்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இவர்கள் பகைமை கொள்கின்றனர். அவ்வாறு அல்லாஹ்விடமிருந்து அனுப்பட்டவருடன் பகைமை கொள்வது ஒருவரை காஃபிராக்கி விடுகின்றது. கலிமா கூறுகின்ற ஒருவரை காஃபிர் என்று கூறுவதன் மூலம் இவர்கள் சுயமே இஸ்லாத்தின் வட்டத்தை விட்டு வெளியேறி விடுகின்றனர். இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய நபிமொழி ஒன்றும் இருக்கின்றது. (சுனன் அபீ தாவூது கிதாபுஸ் ஸுன்னதீ. பாபுத் தலீலு அலா ஸியாத்துல் ஈமானி வ நக்ஸானிஹி ஹதீஸ் 4887)

நம்மை காஃபிர் என்று கூறக்கூடிய இவர்கள் சுயமே இந்த குற்றச்சாட்டின் கீழ் வந்து விடுகின்றனர். எனவே, உங்களது நிலைமைகளின் மீது கருணை காட்டுங்கள் என்று இவர்கள் மீது கொண்டுள்ள அனுதாப உணர்வின் காரணமாக கலிமா கூறுகின்ற இவர்களிடம் இதையே நான் கூறுகின்றோம். இறைவன் என்ன விரும்புகின்றான் என்பதைப் பாருங்கள். புரிந்து கொள்ளுங்கள். அவன் என்ற கூறுகின்றான் என்பதை பாருங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை நான் உங்கள் முன்னால் எடுத்து வைத்திருக்கின்றேன். அந்தோ! இது நல்ல இயல்புள்ள முஸ்லிம்களின் நேர்வழிக்குக் காரணமாக இருக்க வேண்டும். அவர்கள் நம் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதற்குப் பகரமாக தமது நிலைமைகளைப் பார்க்க வேண்டும்.

பாகிஸ்தானின் Assembly –யில் சட்டத்தை உருவாக்குவதற்கான சொற்கள் தொடர்பாக பரஸ்பரம் அவர்களுக்கிடையில் இருந்த விவகாரங்களில் அவர்களே ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டனர். இவ்வாறு இதற்கு ஒரு தீர்வு கண்ட பிறகு சில நாட்களுக்கு முன் Assembly –யின் ஓர் உறுப்பினர் எவ்வித காரணமுமின்றி மக்களைத் தூண்டி விடும் வகையில் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தியுள்ளார். இந்த சொற்பொழிவு Assembly–யில் உள்ள உறுப்பினர்களுக்கு பொய்யான தன்மான உணர்வை ஏற்படுத்துவதற்காக மட்டும் நிகழ்த்தப்படவில்லை. மாறாக, அத்துடன் பொதுமக்களைத் தூண்டி விட்டு நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகவும் அது இருக்கின்றது. அதன் மூலமாக அஹ்மதிகளுக்கு எதிராக எல்லாரும் எழுந்து நிற்க வேண்டும் என்பதையே அவர் விரும்புகின்றார். மேலும் தான் நாட்டின் மீது பற்று கொண்ட ஒரு தலைவர் என்பதையும் நிரூபிக்கின்ற ஒரு முயற்சியாகவும் இது இருக்கின்றது. அதன் மூலம் அவரது அரசியல் வாழ்விற்கு ஒருவேளை புது வாழ்வு கிடைக்கலாம் என்று அவர் கருதுகின்றார். ஆனால், அவர் கூறியதைக் கேட்ட அறிவு படைத்த சில அரசியல் வாதிகளும் ஊடகங்களைச் சார்ந்துள்ள மக்களும் நல்லவர்களும் தங்களது விருப்பமின்மையை வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, நாம் இந்த வகையில் பாகிஸ்தானில் நல்லவர்களின் ஒரு பிரிவினரும் உள்ளனர் என்று நம்பிக்கை வைக்க வேண்டும். அவர்கள் தவறான செயல்களுக்கு எதிராக குரல் எழுப்ப ஆரம்பித்து விட்டனர். அம்மக்கள் பிறகு நீங்கள் என்ன ஆட்சேபனையை செய்துள்ளீர்களோ அதில் எந்த அளவு உண்மை இருக்கின்றது? என்று அவரிடம் கேட்டுள்ளனர்.

தன் தரப்பிலிருந்து மிகுந்த நம்பிக்கையுடன் மார்தட்டியவாறு Assembly –யின் இந்த உறுப்பினர் காயிதே அஃஸம் பல்கலைக்கழகத்தில் உள்ள Physics Department –ற்கு டாக்டர் அப்துஸ் ஸலாம் அவர்களின் பெயரை சூட்டியிருப்பதை எங்களது தன்மான உணர்வு சகித்துக் கொள்ளாது. ஏனென்றால், அவர் காஃபிர் ஆவார். அவருக்கு கத்முன் நுபுவ்வத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று கூறியுள்ளார்.

அவர் இந்த விஷயத்தை சிந்தித்திருக்க வேண்டும். யார் இந்தப் பெயரை சூட்டினாரோ அவர் அவரது கட்சியைச் சார்ந்தவர். அவர் நாட்டின் பிரதமராகவும் இருந்தார். அதிபராகவும் இருந்தார். இன்னும் சொல்வதென்றால், Assembly –யின் இந்த உறுப்பினரின் மாமனராகவும் அவர் இருக்கின்றார். எனவே, பெயர் சூட்டப்பட்ட அந்த சமயத்தில் இவர் ஏன் தனது தன்மான உணர்வை வெளிப்படுத்திக் காட்டவில்லை? இப்போது

இவரது கட்சியின் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதால் அஹ்மதிகளுக்கு எதிராக வாயில் வந்ததையெல்லாம் பேசுவதுதான் நம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரே வழியாக இருக்கின்றது என்று இவர் கருதுகின்றார்.

அஹ்மதிகளைப் பொருத்தவரையில் இந்த பெயரை வைத்தாலும் வைக்கா விட்டாலும் எங்களுக்கு அதனால் எந்த வித்தியாசமும் வராது. மாறாக, எந்த நாளில் இந்த பெயர் வைக்கப்பட்டதோ அந்த நாளில் மர்ஹூம் டாக்டர் அப்துஸ் ஸலாம் அவர்களுக்கு நெருக்கமானவர்களும் அவர்களது மகனும் அவர்களது எல்லா சந்ததிகளும் பாகிஸ்தான் பிரதமருக்கு கடிதம் எழுதினர். அந்த கடிதத்திற்குப் பதில் வரவில்லை. அந்த கடிதத்தில் அவர்கள் இவ்வாறு எழுதினர். எங்களுக்கு வியப்பாக இருக்கின்றது. டாக்டர் சாஹிப் அவர்கள் வஃபாத்தாகி, இருபது வருடங்கள் கடந்த பிறகு பாகிஸ்தானின் சட்டத்தின் அடிப்படையில் அவர்களை முஸ்லிம் அல்லாதவர் என்று கூறப்பட்ட பிறகும் கூட, அதனால் எனது தந்தைக்கு மிகுந்த துக்கம் ஏற்பட்ட பிறகும் கூட அவர்கள் பாகிஸ்தானின் குடிமகனாக இருப்பதை ஒருபோதும் கை விட்டு விடவில்லை. இன்னும் சொல்வதென்றால், அவர்கள் இங்கிலாந்திற்கு புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த சமயத்தில் இந்தியாவின் தரப்பிலிருந்து அவர்களுக்கு இந்திய நாட்டின் குடியுரிமை வழங்கப்படுகின்றது என்ற ஒரு கோரிக்கையும் அவர்களுக்கு முன் வைக்கப்பட்டது. அதற்கு அவர்கள், நான் எப்போதும் பாகிஸ்தானுக்கு நன்றியுணர்வு காட்டுபவனாகவே இருந்து வந்துள்ளேன். எப்போதும் நன்றியுணர்வை வெளிப்படுத்து –பவனாகவே இருந்து வருவேன். இந்த நாட்டின் சிறந்த நிலைமைக்காக எப்போதும் முயற்சி செய்து வருவேன் என்று கூறியவாறு அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டார்கள். அவ்வாறே அவர்கள் எப்போதும் செயல்பட்டும் வந்தார்கள்.

சுருக்கமாகக் கூறுகின்றேன். அந்த சமயத்தில் டாக்டர் சாஹிப் அவர்களின் சந்ததிகள் பாகிஸ்தான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் நாங்கள் முஸ்லிம்களாக இருக்கின்றோம். எங்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்துடன், அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்பதற்காக தொடர்பு இருந்து வருகின்றது. நாங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டுள்ளோம். எனவே, டாக்டர் அப்துஸ் ஸலாம் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்த நாங்கள் அரசின் இந்த தீர்மானத்திற்கு மகிழ்ச்சி தெரிவிப்பதற்குப் பகரமாக எங்களுக்குரிய உரிமைகள் பாகிஸ்தானில் வழங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தால் நாங்கள் இந்த தீர்மானத்திற்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இருக்காது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். எங்களை நாங்களே இதிலிருந்து விலக்கிக் கொள்கின்றோம் என்று எழுதியிருந்தனர். ஆக, இதுவே டாக்டர் சாஹிபின் சந்ததிகளின் செயலாக இருந்தது.

பாகிஸ்தான் Assembly இந்த பெயரை மாற்ற விரும்பினால் மிகவும் மகிழ்ச்சியுடன் அதை மாற்றட்டும். டாக்டர் அப்துஸ் ஸலாம் அவர்களின் குடும்பத்தினருக்கோ அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கோ இதனால் எந்த வித்தியாசமும் ஏற்படப் போவதில்லை. பிறகு அஹ்மதிகளை இராணுவத்தில் சேர்க்க கூடாது என்று இவர்கள் கூறுகின்றனர். இதுவரை இராணுவத்தில் சேர்ந்துள்ள அஹ்மதிகள் நாட்டிற்காக எல்லா விதமான தியாகங்களையும் செய்துள்ளனர் என்பதையே இன்று வரையுள்ள பாகிஸ்தானின் வரலாறு நமக்குக் கூறிக்கொண்டிருக்கின்றது. பொதுவாக இராணுவ சிப்பாய் அல்லது Junior Comissoned Officer அல்லது அதிகபட்சம் கர்னல் மேஜர் வரையில் பதவியில் இருப்பவர்கள்தான் பொதுவாக தியாகங்கள் செய்கின்றனர். ஆனால், அஹ்மதிகள் எப்படிப்பட்டவர்கள் என்றால் தளபதியின் தகுதி வரை சென்றடைந்தும் கூட சாதாரண படை வீரர்களுடன் இணைந்து போர் செய்து நாட்டிற்காக அவர்கள் ஷஹீது ஆகி இருக்கின்றனர். எனவே, அஹ்மதி ஜெனரல்கள் ஷஹீது ஆகி இருக்கின்றனர்.

இதனை இன்றைய நாட்களில் பாகிஸ்தானில் உள்ள ஊடகங்கள் கூட வாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கின்றன. எனவே, உண்மைகள் நம் கண் முன்னால் வந்து விட்டன. நீங்கள் என்ன விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று அவர்கள் கேட்கின்றனர். அதற்குப் பிறகு ஊடகங்களில் ஜெனரல் அஹ்தர் மற்றும் ஜெனரல் அலி ஆகியோரின் பெயரைக் கூறியுள்ளனர். மேலும் நாட்டிற்காக தனது இன்னுயிரை தியாகம்

### திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்..... (49:12)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

### திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக் -கொருவர் புறங்கூறாதீர்கள்.... (49:13)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

### திருக்குர்ஆனிலிருந்து...

*தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷய்த்தானின் கூட்டாளியாவர்.).... (4:39)*

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

### திருக்குர்ஆனிலிருந்து...

*நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) நேர்மையுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு (கொடுப்பதைப்போல)க் கொடுக்கவும், கட்டளையிடுகின்றான்... (16:91)*

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

*தீயவற்றைப் பகிரங்கமாகக் கூறுவதை அல்லாஹ் விரும்புவதில்லை. ஆயினும் அநீதிக்கு ஆளானவரைத் தவிர. (அவர்கள் அநீதியை வெளிப்படுத்தலாம்). அல்லாஹ் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். (41:49)*

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

*மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

### திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

### திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

செய்தவாறு ஷஹீதான ஜெனரல் இஃப்திஹார் அவர்களின் பெயரும் ஊடகங்களில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், ஆவேமாகப் பேசிய இந்த Assembly –யின் உறுப்பினர் இராணுவத்தில் கேப்டன் பதவி வரை சென்றவர் ஆவார். பிறகு பிரதமர் அல்லது முதல் மந்திரியின் மருமகளாக இவர் ஆகி விட்ட காரணத்தால் இவர் இராணுவ சேவையை ராஜினாமா செய்து விட்டு பணம் சம்பாதிக்கும் ஓட்டத்தில் வந்து இணைந்து விட்டார்; அரசியலுக்கு வந்து விட்டார். நாட்டுப்பற்றின் உணர்வு அவரிடம் இருக்கின்றது என்றால் பிறகு அவர் இராணுவத்தில் தொடர்ந்து இருந்திருக்க வேண்டும். மேலும் நாட்டிற்காக தியாகங்களைச் செய்திருக்க வேண்டும்.

இவ்வாறு அஹ்மதிகள் மீது இவர்கள் நாட்டிற்கு தொண்டாற்ற மாட்டார்கள். இவர்கள் நாட்டிற்கு நன்றியுடையவர்கள் இல்லை என ஆட்சேபனை செய்யப்படுகிறது. ஆனால், இன்று பாகிஸ்தானில் அஹ்மதிகள் மட்டும்தான் حُبُّ الْوَطَنِ مِنَ الْاِیْمَان – நாட்டுப்பற்று ஈமானின் ஒரு பகுதியாகும் என்பதன் மீது நம்பிக்கை வைத்துள்ளனர், அதன்படி அவர்கள் செயல்படுகின்றார்கள். அதற்காக அவர்கள் தமது உயிர், பொருள் ஆகியவற்றை தியாகம் செய்யக் கூடியவர்கள் என்று என்னால் உறுதியாகக் கூற முடியும். அவர்கள் அவற்றை தியாகம் செய்து வருகின்றனர். நாங்கள் அரசியல் வியாபாரத்தை மேம்படுத்த வெறும் சொற்பொழிவாற்றக் கூடியவர்கள் அல்ல. எங்களுக்கு அரசியலுடன் எந்தத் தொடர்பும் கிடையாது. நாங்கள் மார்க்கத்திற்காக உயிரை அர்ப்பணிக்கக் கூடியவர்கள் ஆவோம். ஆனால் மார்க்கத்தின் பெயரில் அரசியல் செய்யக் கூடியவர்களோ, மார்க்கத்தின் பெயரில் கொலை செய்யக் கூடியவர்களோ அல்ல. நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என ஏற்றுக் கொண்டுள்ளோம். உள்ளத்தளவிலும் அவ்வாறே நம்பிக்கை கொள்கிறோம். அன்னாரது கண்ணியத்திற்காக எல்லா விதமான தியாகங் –களையும் செய்கின்றோம்; செய்வதற்கு ஆயத்தமாக உள்ளோம்; செய்து கொண்டே இருப்போம் – இன்ஷா அல்லாஹ். பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகளின் கடமை என்னவென்றால், அவர்கள் ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை எந்த நாட்டிற்காக தியாகங்களைச் செய்து வந்தார்களோ அந்த நாட்டை அல்லாஹ் சாந்தி, சமாதானத்துடன் வைப்பதற்காக அநீதி இழைக்கின்ற தலைவர்கள் மற்றும் சுயநலன் கொண்ட ஆலிம்களிடமிருந்து அதனை பாதுகாப்பதற்கும் உலகின் சுதந்திரமான மற்றும் கண்ணியமிகு நாடுகளில் பாகிஸ்தானும் ஒரு நாடாக எண்ணப்படுவதற்காகவும் துஆ செய்து வர வேண்டும்.

★ ★ ★ ★ ★

# அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம்

## மவ்லானா அதாவுல் முஜீப் ராஷித்

(இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாயிலின் இமாம்)

*(மூன்றாம் பாகம்)*

சென்ற இதழின் தொடர்ச்சி...

**பின்னவர்களில் காணப்படும் முன்னுதாரனங்கள்:**

ஹஸ்ரத் ரஸுூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முழுமையான அடியாரும் அன்னாரது உண்மைப் பேரன்பருமான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பின்னவர்களின் அருளுக்குரிய காலக்கட்டமாக இது இருக்கின்றது. இந்த காலக்கட்டத்தில் இறைவன் நம்மைப் பிறக்க வைத்து எந்தக் காலக் கட்டத்தைப் பார்க்க வேண்டும் என்பதற்காக கோடிக்கணக்கான மக்கள் வழி மேல் விழி வைத்துக் காத்திருந்து காத்திருந்து இந்த உலகை விட்டே சென்று விட்டனரோ அந்தக் காலத்தை அவன் நமக்கு வழங்கியிருப்பது நமது நற்பாக்கியமாகும். காலத்தின் மஹ்தி மற்றும் மஸீஹின் சஹாபாக்கள் ஆரம்ப நூற்றாண்டுகளில் வாழ்ந்த சஹாபாக்களின் அடிச்சுவட்டை எத்தகைய அர்ப்பணிக்கும் மனப்பாங்குடன் பின்பற்றிச் சென்றனர் என்றால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களைப் பற்றி இவ்வாறு தமது கவிதையில் நற்செய்தி கூறுகின்றார்கள்:

இப்போது என் மீது நம்பிக்கை கொண்டவர்கள் அருளுக்குரியவர்கள். என்னை அவர்கள் பெற்றுக் கொண்டதன் மூலம் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது சஹாபாக்களுடன் இணைந்து விட்டனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்கள் மற்றும் தாபியீன்களின் உதாரணம் வெகு தொலைவில் உள்ள ஒரு விஷயம் அல்ல. அவர்களில் நற்பாக்கியம் பெற்ற சிலரை காண்பதற்கான நல்வாய்ப்பு நம்மில் சிலருக்கு கிடைத்திருக் -கின்றது. இத்தகைய பல தாபியீன்கள் இன்று நாம் வாழ்கின்ற இந்த காலக்கட்டத்தில் நமக்கு மத்தியில் இருந்து வருகின்றனர். தங்களது வழிகாட்டிகளான சஹாபாக்களின் நற்பண்புகளை அவர்கள் பெற்றிருக்கின்றனர். இஸ்லாத்திற்காக தங்களை அர்ப்பணித்து விட்ட இவர்கள் பொருள் தியாகத்தின் களத்தில் எவ்வகையிலெல்லாம் ஒளிமயமான மினாராக்களைக் கட்டியுள்ளனர் என்பதை இப்போது பார்ப்போம்.

இறை வழியில் செலவு செய்வது ஒரு நற்பாக்கியமாகும். ஆனால், அவ்வாறு செய்தவாறு அளவு கடந்த அர்ப்பணிப்பையும், தியாகத்தையும் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுகின்ற உணர்வையும் வெளிப்படுத்துவது என்பது அந்த தியாகங்களுக்கு மேலும் பொலிவைச் சேர்ப்பவையாக அமைந்து விடுகின்றது.

ஆரம்ப நாட்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப் -பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஒரு முறை ஒரு பிரசுரத்தை வெளியிடுவதற்காக அறுபது ரூபாய் தேவைப்பட்டது அப்போது ஹுஸுர் (அலை) அவர்கள் கபூர்தலாவைச் சார்ந்த முன்ஷி ஸ.்.பர் அஹ்மது சாஹிப் அவர்களிடம் உனடியாக இந்த தேவையை நிறைவேற்ற வேண்டியது உள்ளது. எனது இந்த தேவையை உங்களது ஜமாஅத்தால் நிறைவேற்ற முடியுமா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் முன்ஷி ஸ.்.பர் அஹ்மது சாஹிப் ஆம்! முடியும் என்று பதில் கூறினார்கள். உடனடியாக நேராக தனது வீட்டிற்கு சென்றார்கள். தனது மனைவியின் சம்மதத்துடன் அவர்களது நகைகளை விற்று ஹுஸுர் (அலை) அவர்கள் கேட்ட தொகையை அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்து விடுகின்றார்கள். சில நாட்கள் கழிந்த பிறகு ஹஸ்ரத் முன்ஷி அரோடே கான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திக்க வந்தார்கள். அப்போது ஹுஸுர் (அலை) அவர்கள் அவரிடம் நீங்கள் அனைவரும் குறித்த நேரத்தில் எனக்கு மிகவும் உதவி செய்துள்ளீர்கள் என்று கூறியவாறு கபூர்தலா ஜமாஅத்திற்கு நன்றி தெரிவித்தார்கள். அப்போதுதான் ஹஸ்ரத் முன்ஷி ஸ.்.பர் அஹ்மது சாஹிப் அவர்கள் ஜமாஅத் சகோதரர்கள் எவரிடமும் இது பற்றி எதுவுமே கூறவில்லை என்பது தெரிய வந்தது. எந்த அளவு தாழ்மைக் குணமும் அர்ப்பணிப்பும் தன்னலம் கருதாமையும் இந்த சம்பவத்தில் இருந்து தெரிய வருகின்றது.

அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: அதாவது, ஹஸ்ரத் முன்ஷி அரோடே கான் சாஹிப் (ரலி) அவர்களுக்கு பொருள் தியாகம் செய்வதற்குக் கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பம் கை நழுவிப் போனதில் எந்த அளவு அதிகமாக வருத்தம் ஏற்பட்டதென்றால் அன்னார் வெகு காலம் வரை ஹஸ்ரத் முன்ஷி ஸ.்.பர் அஹ்மது சாஹிப் அவர்கள் மீது வெறுப்படைந் -திருந்தார்கள். அந்த வெறுப்பில் கூட ஒரு மகிமை தென்படுகின்றது. அந்த வெறுப்பிற்கான காரணம் முழு நற்கூலியையும் ஒருவரே பெற்றுக் கொண்டார். எங்களை இந்த நற்கூலியில் பங்கு பெற வைக்கவில்லை என்பது மட்டுமேயாகும்.

(அஸ்ஹாமே அஹ்மது தொகுதி 6 பக்கம் 72)

*தொடரும்...*

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். (16:129)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்த்த(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 16 November 2017 Issue No. 46

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

தவிர்ந்து கொள்ளுங்கள். அது நிராகரிப்பவர்களுக்கென்றே தயாரிக்கப் -பட்டுள்ளது. *(2:25)*

**92 -வது அடையாளம்:** அமிர்தசரஸில் அப்துல் ஹக் கஸ்னவியியுடன் செய்யப்பட்ட முபாஹலாவாகும். அது நடந்து இன்று 11 வருடங்கள் கழிந்து விட்டன. அதுவும் கூட இறைவனின் ஓர் அடையாளமாகும். அப்துல் ஹக் முபாஹாலா செய்ய வேண்டும் என்பதில் மிகவும் பிடிவாதமாக இருந்தார். எனக்கு அவருடன் முபாஹாலா செய்வதில் தயக்கம் இருந்தது. ஏனென்றால், எந்த நபரின் மாணவராக, தான் இருந்ததாக அவர் கூறுகின்றாரோ அவர் எனது கருத்திபடி ஒரு நல்ல மனிதராவார். அதாவது, மர்ஹூம் மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் கஸ்னவி அவர்களே அந்த நபராவார். எனது காலத்தில் அவர்கள் வாழ்ந்திருந்தால் அவர்கள் என்னையும் எனது வாதத்தையும் ஏற்றுக் கொண்டிருந்திருப்பார்கள். அதை மறுத்திருக்க மாட்டார்கள். ஆனால், அந்த நல்ல மனிதர் எனது வாதத்திற்கு முன்னரே வஃபாத்தாகி விட்டார்கள். மேலும் அவரது கொள்கையில் என்ன தவறு இருந்தாலும் அது தண்டனைக்குரிய தவறு அல்ல. ஏனென்றால், அனுமானத்தினால் ஏற்படும் தவறு மன்னிக்கப்படுகின்றது. வாதம் மற்றும் அத்தாட்சி நிறைவடைந்த பிறகே தண்டனை ஆரம்பமாகின்றது. ஆனால், அவர்கள் இறையச்சமுள்ளவராகவும் உண்மையாளராகவும் இருந்தார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. உலகிலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கின்ற நிலைமை அவர்களிடம் மிகைத்திருந்தது. நல்லடியார்களில் ஒருவராக அவர்கள் இருந்தார்கள். நான் அவர்களது மரணத்திற்குப் பிறகு ஒருமுறை அவர்களை கனவில் பார்த்தேன். கனவில் நான் அவர்களிடம், ஒரு வாள் எனது கையில் இருக்கின்றது. அதன் பிடி எனது கையில் இருக்கின்றது. மேலும் மக்கள் வானத்தில் இருக்கின்றனர். நான் வலப்புறமும் இடப்புறமும் அந்த வாளை சுழற்றுகின்றேன். ஒவ்வோர் அடி விழும் போதும் ஆயிரக்கணக்கான எதிரிகள் மரணிக்கின்றனர். அதன் விளக்கம் என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், இது அத்தாட்சியை நிறைவு செய்தல் என்ற வாளாகும். எத்தகைய அத்தாட்சி என்றால் அது பூமியிலிருந்து வானம் வரை சென்றடைகின்றது. எவராலும் அதை தடுத்து நிறுத்த முடியாது. வாள் சில நேரம் வலப்புறமும் சில நேரம் இடப்புறமும் சுழற்றப்படுவதாக நீங்கள் பார்த்திருப்பதன் கருத்து இரண்டு வகையான ஆதாரங்களாகும். அவை உங்களுக்கு வழங்கப்படும். அதாவது, ஒன்று அறிவுப்பூர்வமான ஆதாரங்களாகும்; மற்றொன்று எழுத்துப்பூர்வமான ஆதாரங்களாகும். இரண்டாவது அத்தாட்சி இறைவனின் புத்தம் புது அடையாளங்களின் ஆதாரங்களாகும். எனவே, இந்த இரண்டு வழிகள் மூலமாகவும் உலகின் மீது அத்தாட்சி நிறைவு செய்யப்படும். எதிரிகள் இறுதியில இந்த ஆதாரங்களுக்கு முன்னால் வாயடைத்துப் போய் விடுவர். ஒரு வகையில் அவர்கள் மரணித்து விடுவர் என்று கூறினார்கள். பிறகு அவர்கள் நான் உலகிலிருந்த சமயத்தில் அத்தகைய ஒரு மனிதர் பிறப்பார் என்ற நம்பிக்கையில் இருந்தேன் என்று கூறினார்கள். இது கனவில் அவர்களது நாவிலிருந்து வெளிவந்த சொற்களாகும். மேலும், وَلَعْنَةُ اللّٰهِ عَلَى الْكَاذِبِيْنَ பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்.

அவர்கள் உயிருடன் இருந்தபோது ஒரு முறை கைர்வி என்ற இடத்திலும் இரண்டாவது முறை அமிர்தசரஸிலும் அவர்களுடன் எனது சந்திப்பு இருந்தது. நான் அவர்களிடம் நீங்கள் இறையறிவிப்பைப் பெறக்கூடியவர்களாக இருக்கின்றீர்கள். நமக்கு ஓர் ஆசை இருக்கின்றது. அது நிறைவேறுவதற்காக நீங்கள் துஆ செய்யுங்கள். ஆனால், நான் எனது ஆசை என்னவென்பதைக் கூற மாட்டேன் என்று கூறினேன். அதற்கு அவர்கள், நான் இன்ஷா அல்லாஹ் உங்களுக்காக துஆ செய்வேன் என்று கூறினார்கள். முஹம்மது (ஸல்) அவர்களது மார்க்கம் ஒவ்வொரு நாளும் வீழ்ச்சியடைந்து கொண்டே இருக்கின்றது. இறைவன் அதற்கு உதவி செய்யபவனாக இருக்க வேண்டும் என்பதே எனது ஆசையாக இருந்தது. அதற்குப் பிறகு நான் காதியான் வந்து விட்டேன். சில நாட்கள் கழிந்த பிறகு தபால் மூலமாக அவர்களது கடிதம் எனக்கு கிடைத்தது. அதில் இந்த எளியவன் உங்களுக்காக துஆ செய்தேன். அப்போது وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكَافِرِيْنَ நிராகரிப்பவர்களுக்கு எதிராக எங்களுக்கு நீ உதவி செய்வாயாக என்ற துஆ எனது உள்ளத்தில் இடப்பட்டது என்று அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

சுருக்கமாக, அப்துல் ஹக் மிகவும் பிடிவாதமாக இருந்த பிறகு நான் கலிமா சொல்கின்ற முஸ்லிம்களிடம் முபாஹலா செய்ய விரும்பவில்லை என்று நான் அவருக்கு கடிதம் எழுதினேன். அதற்கு பதில் கூறும் வகையில் நாங்கள் நீங்கள் காஃபிராகி விட்டீர்கள் என்ற ஃபத்வாவை கூறிய பிறகு இப்போது உங்களது பார்வையில் நாங்கள் காஃபிர்களாகி விட்டோம். பிறகு முபாஹலா செய்வதில் உங்களுக்கு என்ன தயக்கம் இருக்கின்றது? என்று அவர் எழுதியிருந்தார். எனவே, அவரது கடுமையான பிடிவாதத்திற்குப் பிறகு நான் முபாஹலா செய்வதற்காக அமிர்தசரஸிற்கு வந்தேன். எனக்கு மர்ஹூம் மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் அவர்கள் மீது உளப்பூர்வமான அன்பு இருந்தது. யஹ்யா (அலை) அவர்கள் ஈஸா (அலை) அவர்களுக்கு முன்னர் தோன்றியது போன்று நான் எனது இந்த உயர் தகுதிக்கு முன்னோடியாகத் திகழ்பவராக அவரையே கருதியிருந்தேன். எனவே, எனது உள்ளமானது அப்துல் ஹக்கிற்காக தீய துஆவை செய்வதை விரும்பவில்லை. மாறாக, அவர் எனது பார்வையில் கருணை காட்டுவதற்கு தகுதியுடையவராக இருந்தார். ஏனென்றால், யாரை தீயவர் என்று கூறுகின்றார் என்பது அவருக்கு தெரியாமல் இருந்தது. அவர் தமது எண்ணத்தில் இஸ்லாத்திற்காக ஒரு தன்மான உணர்வை வெளிப்படுத்துபவராக இருந்தார். இஸ்லாத்திற்கு ஆதரவாக இறைவனின் எண்ணம் என்ன? என்பது பற்றி அவருக்கு தெரியாமல் இருந்தது.

எந்நிலையிலும் முபாஹலாவில் தான் விரும்பியதை அவர் கூறினார். ஆனால், எனது ஆன்மாதான் எனது துஆ மீண்டும் மீண்டும் திரும்பக்கூடிய இடமாக இருந்தது. நான் இறைவன் முன்னிலையில் நான் பொய்யனாக இருந்தால் பொய்யர்களைப் போன்று நான் அழிக்கப்பட வேண்டும். நான் உண்மையாளனாக இருந்தால் இறைவன் எனக்கு உதவி செய்து எனக்கு ஆதரவாக இருப்பானாக என்ற வேண்டுதலையே செய்து வந்தேன்.

இவ்வாறு முபாஹலா செய்து இப்போது 11 வருடங்கள் கழிந்து விட்டன. இந்த முபாஹலா நடந்த பிறகு இறைவன் எனக்கு எவ்வாறெல்லாம் உதவினானோ அதனை இந்த சிறிய நூலில் என்னால் எடுத்துக் கூற முடியாது. இந்த விஷயம் எவருக்கும் மறைவானதாக இல்லை. அதாவது, முபாஹலா நடந்த சமயத்தில் என்னுடன் விரல் விட்டு எண்ண முடிகின்ற சில மனிதர்கள் மட்டுமே இருந்தனர். மேலும், இப்போது மூன்று இலட்சத்திற்கும் அதிகமானோர் என்னிடம் பைஅத் செய்து விட்டனர். பொருளாதார துன்பங்கள் எந்த அளவு இருந்தது என்றால் மாதத்திற்கு இருபது ரூபாய் கூட வராமல் இருந்தது. மேலும், கடன் வாங்க வேண்டியது வந்தது. இப்போது எனது இயக்கத்தின் எல்லா கிளைகளிலிருந்தும் ஏறக்குறைய மூவாயிரம் ரூபாய் எல்லா மாதங்களிலும் வருமானமாக வருகின்றது. இறைவன் இதற்கு பிறகு பெரும் பெரும் வலுவான அடையாளங்களைக் காட்டியுள்ளான். எவர் எதிர்த்தாரோ இறுதியில் அவர் அழிந்து விட்டார். இந்த இடத்தில் முன்மாதிரிக்காக மட்டும் எழுதப்பட்டுள்ள இந்த அடையாளங்களைப் பார்ப்பதன் மூலமாக இறைவன் எவ்வாறெல்லாம் எனக்கு உதவி செய்தான் என்பது தெரிய வரும். இறையுதவியின் அத்தகைய ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்டு விட்டன. அவற்றிலிருந்து முன்மாதிரிக்காக இந்த அளவு அடையாளங்கள் இந்த இடத்தில் எழுதப்பட்டுள்ளது. ஒரு நபரிடம் வெட்கமும் நீதியும் இருந்தால் அவருக்கு இந்த அடையாளங்கள் என்னை உண்மைபடுத்துவதற்கு போதுமானவையாகும்.

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 248)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad